


ஸ்ரீதிருமேனிக்கருப்பர்-திருக்கோயில்

கும்பாபிஷேக மலர்

சிராவயல் புதூர்-12-6-1992





வயிரவன்கோயில் நகரத்தார்கள்-தேனிப்பட்டி

மேலைச்சிவபுரி, கீழசிவல்பட்டி, உ.சிறுவயல், நாச்சியாபுரம்

உ
சிவமயம்

சிராவயல்புதூர்

ஸ்ரீ திருமேனிக்கருப்பர் திருக்கோயில்

கும்பாபிஷேக மலர்

ஆங்கிரச-ஹு வைகாசி-மீ 30உ வெள்ளிக்கிழமை
(12 - 6 - 1992)

வெளியீடு:
வயிரவன் கோவில் நகரத்தார்கள்
தேனிப்பட்டி, மேலச்சிவபுரி, கீழச்சீவல்பட்டி, உ. சிறுவயல், நாச்சியாபுரம்.

காடுவெட்டிப் போட்டு கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர் - வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா! இலக்குமியே
என்றைக்கும் நீங்கா திரு.

பாடுவார், முத்தப்ப செட்டியார்

63-1

பதுமுன்...

அருள்மிகு நம் குலதெய்வங்களுக்கு 1991ம் ஆண்டு நடைபெற்ற ஆடி மாதப் படைப்பின் பொழுது கிடைக்கப் பெற்ற அருள் வாக்கின் அடிப்படையில் இன்று நாம் கும்பாபிஷேகம் கண்டு களித்து மென் மேலும் இறையருள் பெறும் நிலையில் இருக்கின்றோம். இக்கால கட்டத்தில் இத்திருப்பணி சிறப்புற அமைய நமது தெய்வம் காட்டிய வழிகளை தங்களுடன் பகிர்ந்து கொள்வது எங்களது கடமையாகிறது.

சென்ற ஆவணி மாதம் நடைபெற்ற ஐந்து ஊர் வயிரவன் கோவில் நகரத்தார்கள் கூட்டத்தில் திருப்பணிக் குழு அமைக்கப் பெற்று திருப்பணிகளை தை மாதம் முதல் தொடங்க முடிவு செய்யப் பெற்றது. அதன்படி திருப்பணி வேலைகள் துவக்கிடும் வகையில் தை மாதம் கலாதெர்ஷணம் செய்ய, தேதி குறிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்ற சமயத்தில் வழி காட்டும் நம் தெய்வங்கள் அருளால் சில குறிகளைக் கண்டோம். அதனால் பயமுற்ற நாங்கள் இத்திருப்பணியை மேற்கொண்டு செயல்படுத்துவதா அல்லது பின்னர் உத்தரவு பெற்று செயல்படுத்தலாமா என்ற யோசனைக்கு ஆளாக்கப் பெற்றோம். எனவே சரியான அருள் வாக்கு வேண்டி நாங்கள் மேற்கொண்ட பயணத்தில், ஒரு நாளில் மட்டும், சென்ற 6 இடங்களில் 'கூடவே நான் இருக்கிறேன். கவலைப் படாமல் செயல்படுங்கள்' என்ற உத்தரவினையும் மேற்கொண்டு செயல்பட வேண்டிய வழி முறைகளையும் பெற்றோம்.

அதன்படி 23-11-91 அன்று நடைபெற்ற கலா தெர்ஷணத்தில் கலந்து கொண்ட அனைவரும் நம் ''மின்னஞ்செட்டி காளியாத்தாளை'' நேரில் காணும் பெரும்பேறு பெற்றோம். தொடர்ந்து திருப்பணிகளை சிறப்பான முறையில் செய்து முடிக்க அவ்வப்போது அருள் வாக்குகள் கிடைக்கப் பெற்று அதன் அடிப்படையில் செயல்பட்டதால் தான் இவ்வளவு குறுகிய காலத்தில் நாம் கும்பாபிஷேகம் காணும் நிலையில் இருக்கிறோம் என்றால் அது மிகையல்ல. ஒவ்வொரு முக்கியமான கால கட்டத்திலும் அருள் வாக்கில் சொன்னபடி செய்ய வேண்டிய பணிகளை, மாற்றங்களை குறிப்பால் உணர்த்தியும், திருப்பணிக்கு பொறுப்பான பணியாளர்களை அமைக்கவும் நமது குலதெய்வங்கள் வழிகாண்பித்தன என்பதை தெரிவிக்க வேண்டியது அவசியமாகிறது.

திருப்பணிக்கு தேவையான நிதி அவ்வப்போது சேர்ந்தன. அதில் தேக்கமில்லே. இருப்பினும் திருப்பணியை நேரடியாக மேற் பார்வை செய்ய நியமனம் செய்யப்பட்டவர்கள் முழு நேரமும் தங்கி செயல்பட இயலாத நிலே ஏற்பட்ட போது மேற்பார்வைக்கு பொறுப்பான மேலேச்சிவபுரி திரு கரு. தே. தேனப்பசெட்டியார் அவர்கள் மகள் கேட்டுக் கொண்டதற்கிணங்கி திருமதி மீனுட்சி ஆச்சி அவர்கள் முழுமனதுடன் முன் வந்து பொறுப்பேற்று, மிகவும் சிக்கனமான முறையில் இத்திருப்பணியை நிறைவு செய்து தந்துள்ளார்கள் என்ருல் அதுவும் நம் தெய்வம் காட்டிய வழிதான்.

மேலும் இத்திருப்பணியில் முக்கிய பணிகளே மேற்கொள்ள, கமிட்டி மெம்பர்கள் இதன் பொருட்டு அடிக்கடி தங்கள் தொழிலேயும், பணியையும் விட்டுவிட்டு வர நேர்ந்தது. இதனுல் அவர்களுக் கெல்லாம் தொழில்களில் பாதிப்பு ஏற்படாதது மட்டு மல்ல, மென் மேலும் வளர்ச்சியும், கிடைத்துள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது. இவற்றையெல்லாம் நம் தெய்வம் எவ்வளவு வல்லமை உள்ளவை என்பதைச் சுட்டிக் காட்டவே குறிப்பிட்டுள் ளோம்.

நம் தெய்வம் காட்டிய வழியின் அடிப் படையில் இத் திருப்பணி, இன்று நிறைவு பெற்றிருக்கின்றது. இருப்பினும் இந் நிறைவுக்குக் காரணமானவர்களுக்கு இன்று நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

நன்கொடை நல்கிய நல்லோர்களுக்கும், பொருளுதவி வழங்கிய பெரியோர்களுக்கும், விளம்பரங்கள் தந்து உதவிய வணிகப்பெருமக்களுக்கும், மலர்சிறப்புற அமைய வாழ்த்துக்களும், கட்டுரைகளும் அனுப்பிய பெரியோர்களுக்களும், மலரினே சிறப்புற தொகுத்துத் தந்த அக்ரி. என். அண்ணுமலே வலேயபட்டி மற்றும் அழகுற அச்சிட்டுத் தந்த புதுக்கோட்டை மதராஸ் ரிப்பன் பிரஸ் அச்சகத்தாருக்கும், திருப்பணி சிறப்புற அமைய பல்வேறு நிலே களிலும் உதவி செய்த அனேவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அனேவரும் திருவருள் பெற்றுச் சிறக்க பிரார்த்திக் கின்ருேம்.

வாழ்க வளமுடன்

அன்புடன்


திருப்பணிக் குழுவினர்



ஸ்ரீ திருமேனிக் கருப்பர்



ஸ்ரீ சின்னக் கருப்பர்



அருள்மிகு
மின்னஞ்செட்டி காளியாத்தாள்

Courtesy
M. PANAYAPPA CHETTIAR, B. Com., (Hon) C.A.
Chareted Accountant, Neekuppai / Madras.

63-1

உ
போன் : 2115

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம :

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம் ஸமஸ்தானம்

காஞ்சிபுரம்

தலைமை அலுவலகம் : 1, சாலைத் தெரு, பெரிய காஞ்சிபுரம்-631 502.

தேதி 5-5-1992

குலதெய்வ வழிபாடு வாழ்வில் ஏற்படும் பலப்பல சோதனைகளையுமகற்றி மன அமைதியும் வளமும் அளித்து வருவது. இவ்வுண்மையுணர்ந்து சிராவயல் அருள்மிகு திருமேனிக் கருப்பர் கோவில் திருப்பணிக் குழுவினர் தங்கள் குலதெய்வங்களுக்கு மண்டபங்கள் நிர்மாணித்துக் கும்பாபிஷேகம் செய்வித்து மலரும் வெளியிடப்பட இருப்பது அறிந்து மகிழ்கிறோம்.

கும்பாபிஷேகம் இனிதே நடந்தேறவும் மலர் குலதெய்வ வழிபாட்டின் பெருமையை விளக்குவதாக அமையவும் ஸகல மூர்த்த சொருபியான பரமனது இன்னருள் கிட்டுவதாக.

நாராயணஸ்ம்ருதி.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை
சீர் வளர் சீர்
சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள்
குருமகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம்.

திருவாவடுதுறை – 609 803
(தஞ்சாவூர் மாவட்டம்)

நாள் **15-5-1992**

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க"

"வாழ்த்துரை"

வயிரவன் கோயிலைச் சேர்ந்த நகரத்துப் பெருமக்கள் தாங்கள் வழிபடும் குலதெய்வங்களுக்கு அழகிய மண்டபம் அமைத்தும் திருப்பணிகளை முழுமையாகச் செய்தும் மகா கும்பாபிஷேகம் நிகழ்த்தவுள்ளமையும் அது சமயம் சிறப்பு மலரொன்று வெளிவரவுள்ளமையும் தெரிந்து மகிழ்கிறோம்.

மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும் விழா மலர் அறிஞர்களின் அரும்படைப்புகளைத் தாங்கி தெய்வ மணம் கமழ மலர்ந்து இன்பம் செய்யவும் அருள்தரு ஞானமா நடராசப்பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை.

உ
சிவமயம்

ஸ்ரீலஸ்ரீ
காசிவிசுவநாத ஞான தேசிகர்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர் - 623 319.
மானகிரி வழி,
ப. மு. மாவட்டம்

தொலைபேசி : காரைக்குடி } 2946

வள்ளல் போல் வந்து ஏழை மக்களை ஆதரித்து
வாரிவழங்கும் திருமேனிக் கருப்பையா
காவல் கொண்டு காக்கும் தேனாட்சி செகதவல்லித்தாயே
எங்களைக் காக்கும் ஜோதியாய் நின்றிடும் மின்னஞ்செட்டி காளியே
உங்கள் திருவடித் தாமரையை போற்றுகின்றோம்.

திருவளர் சிராவயல் புதூரில் வாழும்
திருமேனிக் கருப்பய்யா பிரியமுடன் இரங்கிவந்து
கண்ணாலே பார்த்தென்னை கருணை புரிந்து
காலமெல்லாம் காத்து ரெச்சிப்பாயே
எந்தாயை தேனாட்சி செகதவல்லி அம்மையை
அகந்தையை களைந்த மின்னஞ்செட்டி காளித்தாயை
அனுபவ மெய்ப்பொருளாம் திருமேனிக்கருப்பரை
அகத்தில் போற்றி அனுதினமும் துதிக்கின்றோம்.

எம்மை ஆட்க்கொண்டு நடத்திச் செல்லும் கொற்றவாளீஸ்வரர் திருநெல்லைத்தாயின் திருவருளால் திருக்குட முழுக்கு நன்னீராட்டு விழா சீறு சிறப்புடன் நடைபெற்று மலர் வெளியீடும் தெய்வீக மனம் கமழ வெளிவர ஆசி கூறுகின்றோம்.

தவத்திரு ஸ்ரீலஸ்ரீ காசிவிஸ்வநாத ஞானதேசிகர்
கோவிலூர் ஆதீனம்.

உ

சிவ சிவ

நன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே.

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி - 623 206
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்
தொலைபேசி : குன்றக்குடி – 9267

நாள் : 14—5—92

அன்பிற் சிறந்த நமது திரு. தே. நாகப்பன் அவர்களுக்கு எல்லா நன்மைகளும் பெருக அண்ணாமலை அண்ணலின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

தங்கள் கடிதம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி.

சிராவயல் அருள்மிகு திருமேனிக்கருப்பர் கோவில் திருக்குட நீராட்டு விழா இனிதே நிறைவெய்தத் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

திருப்பணியில் பங்குகொண்ட அன்பர்கள் அனைவருக்கும் நமது பாராட்டு. வாழ்த்துக்கள்.

திருக்குட நீராட்டு விழா மலர் பலருக்கும் பயன்படும் முறையில் வெளிவர வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

குன்றக்குடி அடிகளார்.

V. N. CHIDAMBARAM
21, Kamala Street,
Chokkikulam
MADURAI-2

Phone : 43223
44881

Date 16—5—92

அன்புடையீர்,

வணக்கம், சிராவயல் அருள்மிகு திருமேனிக்கருப்பர் கோயில் திருப்பணி நிறைவடைந்து, திருக்குட நன்னீராட்டு விழா நடைபெறுவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். சிவப்பணியாகத் திருப்பணி செய்தும் தமிழ்ப்பணியாக மலர் வெளியிட்டும் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கப் பணியாற்றுவது மிகவும் போற்றத்தக்க செயலாகும். சைவத்திற்கு ஒரு பண்டிதமணியையும் தமிழைக்காக்க ஒரு வ. சுப. மாணிக்கத்தையும் தந்த வயிரவன் கோயில் நகரத்தார்கள் இத்திருப்பணியில் ஈடுபட்டிருப்பது மரபுக்குப் பொருந்தும் வழங்கமேயாகும். இத்திருக்குட நன்னீராட்டு விழாமலர் சிறந்த கருத்துக் கருவூலமாகத் திகழவும், தங்கள் திருப்பணி சிறக்கவும், என்னை ஆட்கொண்டு அருள்பொழியும் அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயழகன் திருவடிகளை வணங்கி, வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,
வி. என். சிதம்பரம்

டாக்டர் சுப. அண்ணாமலை,
எம். ஏ. பிஎச். டி
"கயல்" 98, அறிஞர் அண்ணாநகர்
மதுரை - 625 020

தொலைபேசி : 43827

வாழ்த்துரை

ஐந்து ஊர் நகரத்தார்களுக்கு உரிமையான ஸ்ரீ கருப்பர் சுவாமி திருக்கோயில் கும்பாபிடேக விழா நடை பெறுவதும் சிறப்பு மலர் வெளியிடுவதும் அறிந்து மிக்க மகிழ்ச்சி. விழா சிறப்புற நிறைவேற நம் மலர் அழகும் பயனும் பொலிய வெளி வரவும் என் வாழ்த்துக்கள்.

அன்புள்ள,

சுப. அண்ணாமலை

'தமிழண்ணல்'
முனைவர் இராம. பெரியகருப்பன்
சிறப்புநிலைப் பேராசிரியர் (யு.ஜி.சி)
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை-625021

ஏரகம்'
184, சதாசிவ நகர்
மதுரை-625 020
தொ. பே. இல்லம் 43792

நாள் 5—12—1991

வாழ்த்துரை

ஒ. சிறுவயல், நாச்சியார்புரம், கீழச்சிவல்பட்டி, மேலச்சிவல்புரி, தேனிபட்டி ஆகிய ஐந்தூர் நகரத்தார் வழிபடும் தேனாட்சி கோயில் ஊரின்கண் உள்ள கருப்பர் கோயிலுக்குக் குடமுழுக்கு விழா நடைபெறுவதறிந்து மிகவும் மகிழ்ச்சி, இறைவன் திருப்பணியில், மனம், மொழி, மெய்களால் ஈடுபடும் நகரத்தார் இத்தகைய நற்செயல்களில் ஈடுபாட்டுடன் பங்கு கொள்கின்றனர். இச் சமுகம் எல்லாவிதத்தும் தளராது சிறப்புற இறையருள் பாலிப்பார் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

கு. வே. கு. வேங்கடாசலம் செட்டியாரவர்கள் இக் குடமுழுக்கு விழாவில் முக்கிய பங்கேற்றுப் பணியாற்றுவதுடன், குடமுழுக்கு விழா மலர் சிறப்புடன் வெளி வரப்பாடு படுகின்றார்கள், இவர்கள் சின்னக் கருப்பருக்கும், மின்னஞ்செட்டி காளிக்கும் வெள்ளி அங்கி செய்து வைத்தும் திருமேனிக் கருப்பருக்குச் சேமங் குதிரை பிதுப்பித்து செய்து வைத்தும் தமது பங்கைச் செய்து இறையருளைப் பெற்றுள்ளார்கள். அவர்கள் குடும்பம் தழைத்துச் சிறக்க கருப்பர் கோயில் தெய்வங்கள் அருள்புரியவும், இக் குடமுழுக்கு நன்னீராட்டு விழாவை முன்னின்று நடத்தும் அனைத்து நகரத்தார் பெருமக்களும் நல்வாழ்வு பெறவும் வாழ்த்துகிறேன்.

தமிழண்ணல்

உ
சிவமயம்

அருள்மிகு திருமேனிக்கருப்பர் திருக்கோவில்

ஆங்கிரச ஆடு வைகாசி மீ 30 உ (12-6-1992) வெள்ளிக்கிழமை தேனிபட்டி, மேலச்சிவபுரி, கீழச்சிவல்பட்டி, உ. சிறுவயல், நாச்சியாபுரம் வயிரவன் கோவில் நகரத்தார்களால் புதுப்பிக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

திருப்பணிக் குழு :

திரு தே. தேனப்பசெட்டியார் மேலச்சிவபுரி தலைவர்
திரு மு. நா, மு. நாகப்பன் மேலச்சிவபுரி செயலாளர்
திரு தே. நாகப்பன் மேலச்சிவபுரி பொருளாளர்

உப தலைவர்கள்

திரு கரு. மு. சொக்கலிங்கம் செட்டியார் மேலச்சிவபுரி
திரு கரு. தே. சுப்பையா செட்டியார் கீழச்சிவல்பட்டி
திரு செ. இராமையா செட்டியார் தேனிபட்டி
திரு கு. வெ. கு. வெங்கிடாசலம் செட்டியார் உ. சிறுவயல்
திரு அ. நா. அடைக்கப்ப செட்டியார் நாச்சியாபுரம்

கமிட்டி மெம்பர்கள் :

திரு மு. கரு. சுப்பையா செட்டியார் மேலச்சிவபுரி
திரு இராம. முத்தையா செட்டியார் மேலச்சிவபுரி
திரு தெ. மு கரு. இராமநாதன் செட்டியார் கீழச்சிவல்பட்டி
திரு தெ. சுப. தேனப்ப செட்டியார் கீழச்சிவல்பட்டி
திரு இராம. தேனப்ப செட்டியார் தேனிபட்டி
திரு செ. உ. கா. அண்ணாமலை செட்டியார் தேனிபட்டி
திரு தே. லெட்சுமணன் செட்டியார் உ. சிறுவயல்
திரு சொ. முத்துக்கருப்பன் செட்டியார் உ. சிறுவயல்
திரு மு. நா. நாச்சியப்ப செட்டியார் நாச்சியாபுரம்

திருப்பணி மேற்பார்வை

திரு கரு. தே தேனப்ப செட்டியார் மேலச்சிவபுரி
திரு உ. மாணிக்கம் செட்டியார் தேனிபட்டி

திருப்பணிக் குழு.



கரு. தே. தேனப்ப செட்டியார்
மேலைச்சிவபுரி
(தலைவர்)



மு. நா. மு. நாகப்பன்
மேலைச்சிவபுரி
(செயலாளர்)



கரு. தே. தே. நாகப்பன்
மேலைச்சிவபுரி
(பொருளாளர்)

உப தலைவர்கள்



கரு. மு. சொக்கலிங்கம் செட்டியார்
மேலைச்சிவபுரி



கரு. தே. தே. சுப்பையா செட்டியார்
கீழச்சிவல்பட்டி



கு. வெ. கு. வெங்கிடாசலம்
செட்டியார்
உ. சிறுவயல்.



செ. இராமையா செட்டியார்
கழனிவாசல்
(தேனிப்பட்டி)



அ. நா. அடைக்கப்ப
செட்டியார்
நாச்சியாபுரம்.

கமிட்டி மெம்பர்கள்



மு. கரு. சுப்பையா செட்டியார்
மேலைச்சிவபுரி



தெ. மு. கரு. இராமநாதன் செட்டியார்
கீழச்சிவல்பட்டி.



சொ. முத்துக்கருப்பன் செட்டியார்
உ. சிறுவயல்.



செ. உ. கா. அண்ணாமலை செட்டியார்
தேனிபட்டி.



மு. நா. நாச்சியப்ப செட்டியார்
நாச்சியாபுரம்,

கமிட்டி மெம்பர்கள்



இராம. தேனப்ப செட்டியார்
தேனிபட்டி.



இராம, முத்தையா செட்டியார்
மேலைச்சிவபுரி.



தே. லெக்ஷ்மணன் செட்டியார்
உ, சிறுவயல்.



தெ. சுப. தேனப்ப செட்டியார்
கீழச்சிவல்பட்டி

திருப்பணி மேற்பார்வை



உ. மாணிக்கம் செட்டியார்
கழனிவாசல் (தேனிபட்டி)

நமது கோயில் புள்ளிகள்

தேனிபட்டி

1 வயி. மு. உ. மாணிக்கம்
2 வயி. மு. உ. மா. உடையப்பன்
3 வயி. மு. உ. அடைக்கப்பன்
4 வயி. மு. உ அ. ராஜேந்திரன்
5 அ. ராம. அ. அடைக்கலவன்
6 வ. அ. சுப. உ. ராமசாமி
7 வ. அ. சுப. உ. ராம. சுப்பிரமணியன்
8 வ. அ. சுப. உ. ராம. ராமு
9 வ. அ. வ, வீர. கருப்பன் செட்டியார்
10 ப. உ. மு. நா. பழனியப்பன்
11 ப. உ. மு. ராம. முரு. ராமசாமி
12 ப. உ. மு. ராம. முரு. சாமிநாதன்
13 ப. ஆ. முரு. வீர முரு. வீரப்பன்
14 ப. ஆ, முரு. வீர. முரு. வீர. முருகப்பன்
15 ப, ஆ. முரு வீர. முரு. வீர. லெக்ஷ்மணன்
16 ப. ஆ. முரு. வீர, முரு. அடைக்கப்பன்
17 ஆ. பழ. அ. நா. அண்ணாமலை
18 ஆ. பழ. ராம. முரு. அடைக்கப்பன்
19 நாக. ஏ. செ. ஆவுடையப்பன்
20 நாக. ராம, ஆ. பழனியப்பன்
21 நாக. ராம. ஆ. பழ. வெங்கடாஜலம்
22 செ. உ. ராம. வெள்ளயன்
23 செ. உ. ராம. வெ. செல்லப்பன்
24 செ. உ. ராம. வெ. உடையப்பன்
25 செ. உ. ராம. வெ. பாலு
26 செ. உ. கா. அண்ணாமலை
27 செ. உ. கா. அண. செல்லப்பன்
28 செ. உ. கா. அண. காசிவிஸ்வநாதன்
29 ராம. தெ. அ. தே. அடைக்கப்பன்
30 செ. அ. செ. தெ. ராம. தேனப்பன்
31 செ. அ. செ. தெ. ராம. தே. ராமநாதன்
32 வ. செ. உ. பெரி. உடையப்பன்
33 வ, செ. வயி. ரவி
34 செ. ஆ. உ. செ. சோம. செ. உடையப்பன்
35 செ. ஆ, உ. செ. சோம. செ. உ. செல்லப்பன்
36 செ. ஆ. உ. செ. சோம. செ. ராமய்யா
37 செ. ஆ. உ. செ, உ. கரு. பழனியப்பன்
38 செ. ஆ. உ. அ. கரு. கணபதி
39 செ. ஆ. உ. அ. கரு. கண. முத்து தேனப்பன்
40 செ. ஆ. உ. அ. ஆ. கருப்பன் செட்டி

மேலச்சிவபுரி

1 தே. இராமனுன்
2 தே. ராம. முத்துராமன்
3 தே. ராம. மு. இளங்கோ
4 தே. ராம. சேதுராமன்
5 மு. நா. முத்தையா
6 மு. நா. மு. நாகப்பன்
7 கரு. மு. கருப்பையா
8 மு. கரு. மு. முத்துராமன்
9 மு. கரு. மு. கருப்பையா
10 மு. கரு. மு. ராஜா
11 மு. கரு, கதிரேசன்
12 மு. கரு, கதி. கருப்பையா
13 தே. நா, மு. நாகப்பன்
14 தே. நா. மு. நா. முத்தையா
15 தே. நா. மு. நா. ஆறுமுகம்
16 கரு. தே. தேனப்பன்
17 கரு, தே. தே. நாகப்பன்
18 கரு, தே. தே. ராமசாமி
19 கரு. தே. தே. லெக்ஷ்மணன்
20 கரு. மு. கரு. லெக்ஷ்மணன்
21 கரு. மு. கரு. முத்துராமன்
22 கரு. மு. கரு. மு. தியாகராஜன்
23 கரு. மு. கரு. சுப்பையா
24 கரு. மு. கரு. சுப. கருப்பையா
25 கரு. மு. சொக்கலிங்கம்
26 தே. ராம. முத்தையா
27 தே, வி. தேனப்பன்
28 தே. வி. சுவாமிஞதன்
29 மு. சேதுராமன்
30 மு. சே. முத்துராமன்
31 மு. சே. மு. ராஜகுமாரன்
32 மு. சே. மு. தமிழன்
33 கரு. நா. தேனப்பன்

கீழச்சிவல்பட்டி

1 தெ. மு. கரு. தெ. தெ. தேனப்ப செட்டியார்
2 மேற்படியார் தம்பி சுப்பையா
3 மேற்படியார் மகன் சுப. தேனப்பன்
4 தெ. மு. கரு. கரு. இராமனுதன் செட்டியார்
5 மேற்படியார் மகன் ராம. தேனப்பன்
6 மேற்படியார் தம்பி ராம. கருப்பையா
7 மேற்படியார் தம்பி ராம. அழகப்பன்
8 தெ. மு. கரு. சொ. கரு. சொக்கலிங்கம் செட்டியார் (சிவப்பிரகாசம்)
9 தெ. மு. கரு மு. கருப்பஞ்செட்டியார்
10 மேற்படியார் மகன் கரு. மணி
11 தே. மு. கரு. மு. தேனப்ப செட்டியார்
12 மேற்படியார் மகன் கருப்பையா
13 அ. தெ. கரு. தெ. சுப்பிரமணியஞ் செட்டியார்
14 மேற்படியார் தம்பி தே. கருப்பையா
15 மேற்படியார் தம்பி தே. தேனப்பன்
16 அ. கரு. தே. சுப. தேனப்ப செட்டியார்
17 அரு. கண்ணப்ப செட்டியார்
18 மேற்படியார் மகன் அரு. கண. அருணுசலம்
19 அரு. வள்ளியப்ப செட்டியார்
20 மேற்படியார் மகன் வ. சுந்தரம்
21 மேற்படியார் தம்பி வ. கண்ணப்பன்
22 மேற்படியார் தம்பி வ. முத்துக்குமார்
23 மேற்படியார் தம்பி வ. சுப்பையா (சுப்பு)
24 அரு. அருணுசலம் செட்டியார்
25 மேற்படியார் மகன் அரு. சுகுமார்
26 மேற்படியார் தம்பி அரு. கண்ணன்
27 அரு. கருப்பஞ் செட்டியார்
28 மேற்படியார் மகன் கரு. அழகப்பன்
29 மேற்படியார் தம்பி கரு. அருணுசலம்
30 வயி. தெ. தெ. அழகப்ப செட்டியார்
31 தெ. ராம. ராம. தெ. முருகப்ப செட்டியார்
32 மேற்படியார் தம்பி தேனப்பன்

௭. சிறுவயல்

1 வெ. ராம, மு, வெ, தேனப்பன்
2 வெ, ராம, மு, வெ, சண்முகம்
3 வெ, ராம, மு, வெ, வெங்கிடாஜலம்
4 வெ, ராம, மு, வெ, வெ, வெங்கிடாஜலம் (கணேசன்)
5 கு, வெ, கு, வெங்கிடாஜலம்
6 கு. வெ, கு, வெ, குமரப்பன்
7 கு, வெ, கு, வெ, தேனப்பன்
8 கு, வெ, கு, வெ, வெங்கிடாஜலம்
9 கு, வெ, அ, பழனியப்பன்
10 வெ, கு, வெ, சொக்கலிங்கம்
11 வெ, கு, வெ, சொ, முத்துக்கருப்பன்
12 வெ, கு, வெ, சொ, லெட்சுமணன்
13 வெ, கு, வெ, சொ, அழகப்பன்
14 தெ, வெ, தெ, அழகப்பன்
15 தெ, வெ, தெ, அழ, அழகப்பன் (சோலை)
16 தெ, வெ, தெ, அழ, தேனப்பன் (ரத்தினம்)
17 தெ, வெ, தெ, அழ, கைலாசம்
18 தெ, வெ, தெ, அழ வெங்கிடாஜலம் (ராமனுதன்)
20 தெ, வெ, தெ, வெ, வெங்கிடாஜலம் (மணி)
21 தெ, வெ, தெ, வெ, தேனப்பன் (ரெங்கு)
22 தெ, வெ, தெ, வெ. காசி
23 தெ, வெ, தெ, ராம, தேனப்பன் (முத்து)
24 தெ, வெ, தெ, லெட்சுமணன்
25 தெ, வெ, தெ, லெ, தேனப்பன்
26 தெ, வெ, அழ, வெங்கிடாஜலம் (திருப்பதி)
27 தெ, வெ, அழ, வெ, நாகப்பன்
28 தெ, வெ, அழ, வெ, நாகப்பன்
29 தெ, வெ, சி, அள, அள, மீனுட்சிசுந்தரம்
30 தெ, வெ, சி, அள, ராமனுதன்
31 கு, மெ, நா, அள, நா, அழகப்பன் (சுந்தரம்)
32 கு, மெ, நா, அள, நா, அழ, நாராயணன் (சம்மந்தம்)
33 கு, மெ, நா, அள, நா, தேனப்பன்
34 கு, மெ, நா, அள, நா, வள்ளியப்பன்

நாச்சியாபுரம்

1 அ, நா, அடைக்கப்பன்
2 அ, நா, அ, நாச்சியப்பன்
3 அ, வயி, வயிரவன்
4 அ, வயி, வயி, சண்முகம்
5 மு, பழ, கதி, நா, நடராஜன்
6 வ, கரு, மு, நா, நாச்சியப்பன்
7 வ, கரு, மு, நா, உத்தமன்
8 வ, கரு, வ, நா, வள்ளியப்பன்
9 வ, கரு, வ, நா, முத்து

உ
சிவமயம்

"தேனுட்சி என்று அழைத்தால் ஏனுட்சி (என்ன ஆச்சி) என குரல் கேட்கும்"

சுமார் 50 வருடங்களுக்கு முன் மேலைச்சிவபுரியிலிருந்து பங்காளிகள் நம் குலதெய்வங்களை வணங்க 5 மாட்டு வண்டிகளில் தேனுட்சி அம்மன் கோவிலுக்கு புறப்பட்டார்களாம். அபிஷேக சாமான்களையும் மாலை மற்ற சாமான்களையும் திருப்பத்தூரில் வாங்கிக்கொண்டு புறப்பட்டு வரும்போது தென்கரை என்ற ஊரை அடுத்து வருகையில் இரவு 8 மணி ஆகி விட்டதாம். எங்கிருந்தோ தொடர்ந்து வந்த திருடர்கள் வண்டிக்கு முன்னும் பின்னும் வந்துகொண்டு இருக்கும்போது சிராவயல் பொட்டலில் வண்டி செல்லும்போது மடக்கி கொள்ளையடித்துவிடுவோம் என்று திருடர்கள் பேசியதை நம்மவர்கள் கேட்டு பயந்து தேனுட்சி, தேனுட்சி என்று விண் அதிர சப்தம் போட்டார்களாம். அப்போது ஏனுட்சி (என்ன ஆச்சி) ஏனுட்சி என்று எங்கிருந்தோ குரல் கேட்டதாம்.

சிறிது நேரத்தில் திருடர்களுக்கு கண் பார்வை மெல்ல, மெல்ல மறைந்து கொண்டே வந்ததாம். முன் சென்றுகொண்டு இருந்த திருடர்கள் யாவரும் பின் வந்து கொண்டு இருந்த ஒரு வண்டியை பிடித்துக்கொண்டே வந்தார் களாம் திருடர்கள் வண்டியை தொட்டுக்கொண்டு வந்ததால் பயந்து நம் பெண்கள் முன்னைவிட அதிகமாக தேனுட்சியை அழைத்தார்களாம், சிறிது நேரத்தில் முழுவதுமாக திருடர்களுக்கு கண் தெரியவில்லையாம். உடனே அவர்கள் வண்டியை நிறுத்தச்சொல்லி நாங்கள் உங்களிடமிருந்து பொருட்களை யும், ஆபரணங்களையும் கொள்ளையடிக்கவே வந்தோம். ஆனால் எங்களுக்கு கண் பார்வை தெரியவில்லை. உங்கள் தேனுட்சி அம்மனை நீங்கள் அழைத்த வுடன் கண் தெரியவில்லை யென்ற விபரத்தைக் கூறினார்களாம்.

நம்மவர்களுடன் கூடவே அவர்களும் கோயிலுக்கு வந்து நம் தேனுட்சியை வழிபட்டு (நம்மவர் உதவியுடன்) கோயில் வாசலில் நின்று இனிமேல் நம் கோவிலுக்கு வருபவர்களுக்கு எந்த சிறிய தொந்தரவும் செய்வதில்லை என்று சத்தியம் செய்து மன்றாடினார்களாம்.

பிறகு நம்மவர்களும் நம் தேனுட்சியிடம், தவறு செய்தவர்கள் திருந்தி யுள்ளார்கள்; எனவே மன்னித்து திருட வந்தவர்களுக்கு மீண்டும் கண் பார்வை அளிக்க வேண்டும் என்று வேண்டினார்களாம். பிறகு நம் தேனுட்சி அருள் பாலித்ததால் மீண்டும் கண் பார்வை கிடைத்த திருடர்கள் நம் தேனுட்சி, திருமேனி கருப்பர், காளியாத்தாள் ஆகிய நம் குல தெய்வங்களை வழிபட்டு சென்றார்களாம்.

இச்செய்தியை மேலைச்சிவபுரி கரு. தே. நாகப்பன் அவர்களின் அப்பத்தா உமையாள் ஆச்சி அவர்கள் சொல்ல கேட்டு மலருக்கு செய்தியை அளித்திருப் பவர் கரு. தே. நாகப்பன்

''உள்ளம் உருகி வழிபட்டால் உதவிடும் நம் காளியாத்தா''

நானும் 1971ஆம் ஆண்டு வேலை பார்த்து சேமித்து பணம் கொஞ்சம் வைத்திருந்தேன். சில நண்பர்களும் உதவுவதாக சொல்லி வியாபாரம் ஆரம்பிக்கச்சொல்லி என்னை ஊக்கப்படுத்தினார்கள், ஆனால் எனக்கு சற்று பயமாக இருந்தது. வயதும் குறைவு. எனக்கும் சென்னையில் மாநகராட்சி ஆஸ்பத்திரியில் வேலைக்கு சேரும்படி அழைப்பும் வந்திருந்தது. நாம் வைத்திருக்கும் பணத்தை வட்டிக்கு கொடுத்துவைத்தால் தங்கை திருமணத் திற்கு உதவும்; நாமும் வேலைக்கு செல்லலாம் என்ற எண்ணமும் வந்தது.

இப்படி பலவாருக மனக்குழப்பத்தில் என் தாயாரையும் கலந்து முடிவு செய்வோம் என்று மேலைச்சிவபுரி வந்தேன், எங்கள் குடும்ப உறுப்பினர் களுடன் அமர்ந்து பேசிக்கொண்டு இருக்கையில் எந்த முடிவும் துணிந்து சொல்ல யோசித்தார்கள்.

திடீரென்று எனது 9 வயது தம்பி கண்கள் சிவந்து மிக உக்ரமாக பார்த்தான், பெரும் சப்தத்துடன் ஒரு கையை உடுக்கு அடிப்பது போல செய்து கால்களை மண்டி போட்ட மாதிரி வைத்துக்கொண்டு எங்கள் வளவில் படைக்கும் வீட்டுக்கு அருகில் போய்விட்டான்.

மிகவும் தைரியமாக இருக்கும் என் தாயாரும் பயந்து என்ன, என்ன என்றார்கள். உடனே என் அப்பத்தா ஓடி வந்தார்கள். அவர்கள் வந்ததும் நம் காளியாத்தா வந்திருக்கிறது. ஏன் பயப்படுகிறீர்கள் என்று பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு என்ன, என்ன என்று கேட்டது. நாங்கள் யாவரும் சற்று தள்ளியே நின்றுகொண்டு இருந்தோம். என் தாயார் மட்டும் சற்று முன் சென்றார்கள்.

யோசிக்காதே ! என்று என்னை கூப்பிட்டதும் நானும் சற்று பயந்தே முன் சென்றேன், எனக்கு ஒன்றுமே கண நேரம் புரியவில்லை.

பயப்படாதே! வியாபாரம் செய்! என்றும் நான் துணை நிற்பேன் என்றும் இரண்டு வார்த்தை சொல்லிவிட்டு, பயப்படாதீர்கள் என்று அனைவருக்கும் என் அப்பத்தாகையிலிருந்த திருநீற்றை கொடுத்துவிட்டு உடன் என் தம்பி அப்படியே படுத்துவிட்டான். நெஞ்சு மிகவும் படபடத்தது. உடல் முழுவதும் வியர்வை (குளித்தது போல) சுமார் ஒரு மணி நேரம் கழித்து தான் எனது தம்பி கண் விழித் தான், நாங்களும் நிம்மதி பெருமூச்சு விட்டோம்.

நானும் சுமார் 5 வருடம் சென்னையில் இருந்ததால் அங்கு நடைபெறும் நாத்திகப்பிரச்சாரமும் என்னை சிந்திக்கவைத்தது. கடவுள் உண்டா இல்லையா என்றுஎண்ணிப் பார்ப்பேன். கடல், நீர், மழை, வெயில் இவைகள் மனிதனை மீறிய சக்திதான் என்றும், சந்திரன், சூரியன் மற்ற கிரகங்கள் உள்ளதாக

தற்போதைய விஞ்ஞானமும் சொல்வதால் நம் முன்னோர்கள் எவ்வளவு புத்தி கூர்மையால் கிரகங்களை ஆராய்ந்திருக்கிறார்கள் என்றும் எண்ணி நாத்திக வாதங்களை ஒதுக்கி கடவுளை மனதார நினைப்பேன், கவிஞர் கண்ணதாசன் வாழ்வின் எல்லா நிலைகளையும் கண்டவர்; அவர்கூட கடைசியில் ஆன்மீகம் சம்பந்தமாக எவ்வளவு ஆழ்ந்த நல்ல கருத்துக்களை கொண்டுள்ளார்கள் என்று நினைக்கையில் என் மனது தானாகவே கடவுளை நினைக்க ஆரம்பித்துவிடும்.

நமது காளியாத்தா என் தம்பி மூலம் எங்களுக்கு கொடுத்த அருள் வாக்குப்படி தொழிலில் ஈடுபட்டு முன்னேற்றம் அடைந்துள்ளதால் நம் காளியாத்தாள் மீது பற்றுதல் அதிகமாகியது. உள்ளம் உருகி வழிபட்டால் உதவிடுவாள் நம் காளியாத்தாள் என அறுதியிட்டுக் கூறலாம்.

தே. நாகப்பன், மேலைச்சிவபுரி

மின்னஞ்செட்டி காளியாத்தாள் வரலாறு

தேனாட்சி அம்மன் கோவில் மண்டப தூண்களில் உள்ள ஆடவர், மகளிர் சிற்பங்கள் கலைச் சிறப்புடையவை. இவை வெங்களப்ப நாயக்கர் காலத்தில் உருவாக்கப்பட்டவை. இந்த திருநாள் மண்டபத்தின் தூண் ஒன்றில் நிறை அழகுடன் உருவாக்கப் பெற்றிருந்த மின்னஞ்செட் டியார் சிலை என்பது உடைந்து போய் தற்சமயம் பாதங்கள் மட்டும் உள்ளன. இந்தச் சிலை உயிர்ச் சிலையாக விளங்கப் பெற்றதாகவும், மற்றவர்கள் பெற்றுவரும் திருக்கோவில் பிரசாதங்களை இது பறித்து உண்டுவந்ததாகவும் ஆதலால் இந்தச் சிலை உடைக்கப்பட்டு, அருகில் உள்ள திருமேனிக்கருப்பர் ஆலயத்தில் சமாதி வைக்கப்பட்டு அதன் மீது காளியை எழுந்தருளச் செய்துள்ளதாக செவி வழிச் செய்தி உள்ளது. திருமேனிக் கருப்பர் கோயிலில் உள்ள அந்தக் காளிக்கு மின்னஞ்செட்டி காளியென்று இப்போதும் பெயர் வழங்கப் பெற்று வருகிறது.

ஸ்ரீ தேனாட்சி அம்மன் கோயில் தலவரலாறு
புத்தகத்தில் இருந்து தொகுப்பு மு. நாகப்பன்

சேமங்குதிரைகள் வரலாறு

அருள்மிகு தேனுட்சி அம்மன் கோயில் திருமேனிக் கருப்பையாவுக்கு உ. சிறுவயல் வெ கு. வெ. குடும்பத்தாரால் சேமங்குதிரைகள் இரண்டும் கட்டி சுக்ல வருஷம் ஐப்பசி மீ 30-ம் தேதிக்கு 15-11-1929-ம் தேதி கண் திறந்து வைக்கப்பெற்றது. நாளடைவில் குதிரைகள் இரண்டும் பூதங்களும் உடைந்து சேதமடைந்து விட்டன. அதன் பின்பு சேமங்குதிரைகள் இரண்டையும் பொம்மைகள் பூதங்கள் உட்பட மராமத்து செய்து, புதுப்பித்து, வர்ணம் வைத்து உ. சிறுவயல் கு. வெ. கு. வெங்கிடாசலம் செட்டியார் அவர்களால் கீழ்கண்ட தேதிகளில் அவ்வப்போது மராமத்து பார்த்து வர்ணங்கள் வைத்து கண் திறந்து வைக்கப் பெற்றது.

விரோதி கிருது ௵ ஆனி மீ 21௳ 5-7-1971
ரவுத்ரி ௵ ஆனி மீ 9௳ 23 6-1980
பிரபவ ௵ தை மீ 21௳ 4-2-1988
ஆங்கிரச ௵ வைகாசி மீ 30௳ 12-6-1992

தகவல் : கு. வெ. கு. வெங்கிடாசலம் செட்டியார்
உ. சிறுவயல்

ஆனைமுகனுக்கு அஞ்சலி

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

—உமாபதி தேவர்

வாக்குண்டாம்; நல்ல மனமுண்டாம்; மாமலராள்
நோக்குண்டாம்; மேனி நுடங்காது - பூக் கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

தேனுட்சி அம்மன்

சிங்கவா கினிகௌரி மங்களகல் யாணிசிவ
சக்திசின் மயசொரூபி!
தேவியே மாயைவிடு சூரசம் ஹாரியே
ஜெயசத்வ சித்துவேவெண்
திங்கள்நதி கங்கையணி எங்கள்சிவ காமியே
சிவசக்தி பராசக்தி!
சித்திபல தந்தருளும் சத்ருசம் ஹாரியே
சிங்கார ஓங்காரியே!
மங்களகல் யாணகுண மாமணிசர்ப் பாபரணி
மலையரசன் அருள்செல்வியே!
வராகிகங் காளிஅங் காளிநர்த் தனிஆதி
வாலைமுக் கண்ணிதேவி!
தங்குதிரி யம்பகி எங்கெங்கும் நிறைவான
சாமளா தேவி என்னும்
தானுட்சியே சிராசை யூர்நாச்சி உயர்வல்லி
தேனுட்சி செகதவல்லியே!

காரணி பூரணி நாரணன் சோதரி
காபாலி கௌமாரிஆதி
கங்காளி அங்காளி நங்காளி திரிசூலி
கருமாரி முக்கண்ணி ஜோதி
வாரணி தனையாளும் மாதேவர் தன்னுடன்
வாதாடி நர்த்தனம் செய்
வஞ்சியப ரஞ்சிசெய ரஞ்சித கருணைகரி
மரகத நிறத்தி என்னும்
வாரணந் தனையுரித் தாடைபுனை சங்கரி
மனோன்மணி ஆதிவாமி
மகமாயி திரிபுர தகனமுக் கண்ணியே
மாதேவி திரியம்பகி
தாரணிக் குரியமா தங்கியே அடியவர்கள்
சஞ்சலம் அகற்றிவைக்கும்
தானுட்சியே சிராசை யூர்நாச்சி உயர்வல்லி
தேனுட்சி செகதவல்லியே!

தண்டையொடு கிண்கிணி வெண்டையம் காலினில்
சதங்கைகண கணவென்னவே
சப்திக்க எக்கணமும் முத்தர்சிவ பக்தரிரு
தாளிணைப் பணிந்து போற்ற

அண்டரொடு முப்பத்து முக்கோடி தேவர்களும்
அயிராணி கேள்வன் முதலாய்
அஷ்டதிக்குப் பாலகர் எட்டுமா வசுக்கள்வந்
தடிபணியும் மாரி! முன்மார்க்
கண்டனுக் காய்எமனை நின்றுகால் தூக்கி உதை
கருணார விந்தநிமலை!
கங்கையணி மங்கைசிவ சங்கரி திரியம்பகி
காரணி பரிபூரணி!
சண்டப்ர சண்டஉத் தண்டிகோ மளவல்லி
சருவாணி சாமுண்டியே
நாணுட்சியே சிராசை யூர்நாச்சி உயர்வல்லி
தேனுட்சி செகதவல்லியே!

திருமேனிக் கறுப்பண்ணன்

தொண்டர்கள் வந்துனது புண்டரிக மலர்ப்பதம்
துதித்திட வரங்கள் தருவாய்!
துஷ்டப்பி சாசுவந் தணுகாமல் வலிபிணி
துன்பங்கள் நேரிடாமல்
வண்டரர் திருடர்கள் வஞ்சனை ஏவல்கள்
வாராம லேதுரத்தி
வல்வினை விரட்டியே சௌபாக்யம் நிதமுதவும்
மாயாவு தாரன்நீயே!
நன்றான ஜெயவீர கண்டா மணியுடன்
நலமான எரியீட்டியும்
நயமுள்ள செம்பட்டும் இடையினில் இறுக்கியே
நாகமணி பணியாடவே
செண்டான மலர்களின் நறுமணம் வீசவே
ஜெயமுடன் வந்தருளுவாய்!
தேனுட்சி வாசலதி காரிகார் மேகமே
திருமேனிக் கறுப்பண்ணனே!

முத்துக் கறுப்பன்நவ ரத்னக் கறுப்பனெழில்
முழுநீல மெய்க்கறுப்பன்!
மூதண்ட மாகவரும் சின்னக் கறுப்பன்கிருபை
முற்றிலும் செய்கறுப்பன்!
கத்தனென வந்தநற் பெரிய கறுப்பனருள்
கடாட்சித் தாள் கறுப்பன்!
கருணைக் கறுப்பன்மலை யாளக் கறுப்பனொளிக்
கட்டாணி பூண் கறுப்பன்!

பக்தர்கள் கூடியே நித்தமும் தொழுகின்ற
பதினெட்டாம் படிக்கறுப்பன்!
பாங்குடன் சோலைமலை மீதினில் மேவிவளர்
பரிபூ ரணக்கறுப்பன்!
சித்துவிளை யாடியே நின்றவலங் காரனும்
ஜெகஜ் ஜோதி மெய்க்கறுப்பன்!
தேனுட்சி வாசலதி காரிகார் மேகமே
திருமேனிக் கறுப்பண்ணனே!

அடியார்கள் பணியவே குடிகாத்து ரட்சிக்கும்
அழகான தெய்வம்நீயே!
அன்போடு நல்லதோர் கருங்கிடாய்க் கறுப்பனுய்
ஆளவந் தவனும் நீயே!
குடியான அடியார்க்கு நலமோங்கு செல்வங்கள்
கொடுத்தருளு பவனும் நீயே!
கோதண்ட பாணியென வேவந்த கார்மேகக்
குணமோங்கு பேரின்பமே!
துடியான பிசாசுகள் தொடராமல் அவைகளைத்
துரத்திவிட் டவனும்நீயே!
துன்பங்கள் அணுகாமல் இன்பங்கள் உதவிடும்
சொர்ணமய மானமுதலே!
செடிமலர்கள் அணிகின்ற திண்புயத் தோழனே
செல்வங்கள் தந்துதவுவாய்!
தேனுட்சி வாசலதி காரிகார் மேகமே
திருமேனிக் கறுப்பண்ணனே!

நன்ருன தீவட்டி மெழுகுவர்த்தி ஏற்றியே
நடனமிடும் அரம்பையோர்பால்!
நாகசு ரங்களும் பேரிகை ஒலிகளும்
நாடியே வணங்குமொருபால்!
குன்ருத தாரையொடு மத்தளம் துருத்திபல
கொம்புகள் முழங்குமொருபால்!
கொடிதான துட்டப்பி சாசையும் விரட்டியே!
குடிகாக்க நின்ற தொருபால்!
அண்டாத வல்பிணிகள் துன்பமும் அகற்றியே
அருள்பெருக நின்ற தொருபால்!
அடியார்கள் தீவினை போக்கியே திருநீறும்
அள்ளிக் கொடுப்பதொருபால்!
தெண்டா லடித்துமே செய்வினைகள் வெருண்டோடச்
செய்வதுவும் நின்மகிமையே!
தேனுட்சி வாசலதி காரிகார் மேகமே
திருமேனிக் கறுப்பண்ணனே!

சந்தனம் புனுகுநல் அத்தர்பன் னீருடன்
ஜவ்வாது கந்த மணமும்
தகவுள்ள ஆரங்கள் மெய்யினில் இலங்கவே
சாம்பிராணி வாசமோர்பால்!
அந்தணர்கள் வேதங்கள் ஓதியே பாதமதில்
அர்ச்சனைகள் செய்வதோர்பால்!
அருமறைகள் பாடியே சாமரைகள் வீசியே
ஆடிநிற் பதுமோர்பால்!
விந்தைசெறி மாமுனிவர் கின்னர தேவரும்
வேதங்கள் சொல்வதோர்பால்!
விளங்குகிம் புருடரும் வித்தியா கரர்களும்
வேடிக்கை பார்ப்பதோர்பால்!
சிந்தைதனில் உன்பதம் தன்னையே நினைப்பவர்கள்
செல்வமொடு நாளும் வாழ்வார்!
தேனாட்சி வாசலதி காரிகார் மேகமே
திருமேனிக் கறுப்பண்ணனே!

காலிலிடு தண்டைநவ ரத்ன அரை ஞாணுடன்
கையினில் வாள்பிடித்து
கனகநிறை பாதரெட் சைதனி லேறியே
கச்சை மணி கலகலென்ன
மேலிலிடு அங்கியும் நெற்றியில் திருநாமம்
வெகுபணிகள் மணிகளாட
மீசையின் முறுக்கினொளி பளபளென மின்னவே
மிகு குடைகள் புடைசூழவே
சாலிலிடு தயிர்வெண்ணெய் உண்டகோ தண்டனே
சமயமிது காக்கவேணும்
சந்திராதி தேவர்கள் இந்திரன் முதலியோர்
தாள்துதித் திடுமய்யனே!
சேலிலிடு நீள்விழியின் மாதரார் அரம்பையர்
தினம் கவரி வீசுகின்ற
தேனாட்சி வாசலதி காரிகார் மேகமே
திருமேனிக் கறுப்பண்ணனே!

அற்புத மாகவே பணிபவர் வினைகளை
அகற்றிடும்கு ணமேருவே;
அன்புடன் உன்குடிகள் மென்மேலும் விருத்தியாய்
ஐஸ்வர்யம் ஓங்கிவாழ
வைப்பதும் உன்கடமை உனையன்றி வேறுதுணை
மாநிலம் தன்னிலுண்டோ?
மாயாவு தாரனே காயாம்பூ வண்ணனே
மலர்ப்பதம் காட்டி அருள்வாய்!

இப்புவி தன்னிலே உன்னருள் வேண்டியே
எப்போது மேதுதிக்கும்
எனக்குளம் இரங்கிவந் தாளுவாய் கேசவா
எங்கும் நிறைந்த பொருளே!
செப்பரிய சாமள வண்ணநல் மேனியாய்!
சீர்பாத மளித்தாளுவாய்!
தேனாட்சி வாசலதி காரிகார் மேகமே
திருமேனிக் கறுப்பண்ணனே!

அஞ்சனக் காரன்நீ மந்திர குடோரன் நீ
அடங்காத துரையும் நீயே!
அழகான நீலநிறப் புரவிமீ தேறியே
அஷ்டதிசை கிடுகிடென்ன
தஞ்சமெனும் அடியார்கள் முன்வந்து ரட்சிக்கும்
சண்டப்பிர சண்டன் நீயே!
சாலோக சாமீப சாரூப சாயுஜ்ஜிய
தனிப்பதம் அருளும் மூர்த்தி!
மஞ்சரி முல்லையொடு மல்லிகை துளபமணி
மார்பினில் அணிந்த தேவே!
மனத்திலே உன்பாதம் அனுதினமும் மறவாத
மனிதர்கள் போற்றி நின்று
செஞ்சரண மேதொழுது சாற்றிய கவிக்குநீ
திருவருள் புரிந்தாளுவாய்!
தேனாட்சி வாசலதி காரிகார் மேகமே
திருமேனிக் கறுப்பண்ணனே!

பெரிய கறுப்பண சுவாமி

உருமக் கறுப்பனெழில் மாலைக் கறுப்பனும்
உலகிலொப் பிலிக்கறுப்பன்!
உச்சிக் கறுப்பனுயர் பச்சைக் கறுப்பனும்
உறங்காப் புளிக்கறுப்பன்;
திருமெய்க் கறுப்பன்ஜெக ஜாலக் கறுப்பனும்
திருப்பாற் கடற் கறுப்பன்!
சேனைக் கறுப்பன்மத யானைக் கறுப்பன்நம்
சிங்கைக் கறுப்பனறிவாய்!

அருமைக் கறுப்பனுரு பருமைக் கறுப்பனனு
கூலமுத் துக்கறுப்பன்!
ஆலைக் கறுப்பன்வளர் சோலைக் கறுப்பன்நமை
ஆண்டநொண்டிக்கறுப்பன்!
பெருமைக் கறுப்பனருள் சொரியும் கறுப்பனுயிர்
பேணும்அன் புக்கறுப்பன்!
பேடைக் குயில்திரியும் ஓடைச் சிருவயலின்
பெரியகறுப் பணசுவாமியே;

கட்டழகும் உன்னுடைய காயாம்பூ மேனியும்
கார்மேக வண்ண ஒளியும்
காலிட்ட தண்டையும் கிண்கிணி சிலம்பசையக்
கலகலென மணி ஓசையும்
இட்டசல் லடைமீது கட்டிடும் கச்சையும்
இறக்கிவிடு தொங்கலழகும்
இடையிலிடு சமுதாடு கட்டாணி நேரிசம்
எனையளவு சிங்காணியும்
சட்டமுடன் அணிந்திட்ட வல்லவேட் டும்உயர்
சருகையிடு சோமனழகும்
தளதளென மின்னவே மார்பினில் பூணுநூல்
சரப்பணி பதக்கம்மின்ன
பொட்டிட்ட கஸ்தூரி சந்தனம் கமழவே
புவியிதனை ஆட்சிபுரிவாய்
பொற்புடைய சிங்கையம் பதிவளரும் துரையான
பெரியகறுப் பணசுவாமியே!

பெரிய கறுப்பன்- சின்னக் கறுப்பன்

தேனாட்சி அம்மனின் திருக்கோயில் வாசலைச்
சிறப்புடன் காவல்காக்கச்
சிந்தையில் எண்ணியெம் முந்தையர் தம்முடன்
செல்லவே மறுத்துவிட்டீர்!
ஏனாட்சி செய்வதென் றுலகுக் குணர்த்திட
எங்களைக் காத்துநின்றீர்
இடரதும் துயரதும் தொடர்ந்திடா வண்ணமே
என்றுமே துணையிருந்தீர்!
வானாட்சி செய்கின்ற தேவரும் மாந்தரும்
வந்துநின் றுமைத் துதித்து
வணங்குவார் இரவினில் ஆட்டினைப் பலிதந்து
வளமெல்லாம் பெற்றுவாழ்வார்!
கானாட்சி செய்கின்ற பேய்களின் கொடிதான
காற்றுமே எமைத்தொடாது
காத்திடும் நற்பெரிய கருப்பனே! அருள்சின்னக்
கருப்பனே! போற்றிபோற்றி!

— புதுவயல் செல்லப்பன்

மின்னஞ் செட்டி காளி

கோழியும் முட்டையும் குங்கும மும்வைத்துக்
கும்பிடில் போதுமம்மா,
கூப்பிட்ட குரலுக்கு வேகமாய் வந்துநீ
குறைகளைப் போக்கிவிடுவாய்!
ஆழியில் கப்பலில் சென்றிடும் வணிகரின்
அருகிலே துணையிருப்பாய்!
அக்கரைச் சீமையில் பொற்குவைச் செல்வமே
அன்னவர்க் களித்தருளுவாய்!
பாழிலே போனதாய் எண்ணிய பொருளினைப்
பத்திர மாக மீட்கப்
பக்தியோ டைந்தேகால் பணம்முடிந் திட்டதும்
பாங்குடன் வாங்கி விடுவாய்!
மேழியும் செல்வமும் மிக்கநன் நலன்களும்
மேன்மையும் ஓங்க அருள்வாய்!
மேதினி தன்னிலே ஜோதியாய் நின்றிடும்
மின்னஞ்செட்டி காளியே!

— புதுவயல் செல்லப்பன்

மஹரா காளர்

சங்கிலிநற் கறுப்பன்நீ சார்ந்திட்ட பொருளும்நீ
சடாட்சர மந்திரமும் நீயே!
சகலரும் துதிக்கின்ற தேவாதி தேவன்நீ
சாம்பிராணி வாசனும் நீயே;
எங்கெங்கு அழைத்தாலும் ஏழையின் வாசலில்
எழுந்தோடி வருபவனும் நீயே!
இதயத்தில் இருப்போன்நீ! இரத்தத்தில் கலப்போன்நீ!
இரவுபகல் காப்பவனும் நீயே!
குங்குமம் சிறக்கவும் குடியெலாம் வாழவும்
குலம் காக்கும் என்தெய்வம் நீயே!
குன்றும்நீ! குளமும்நீ! கோலா கலனும்நீ!
குன்ரு வளப் பொருளும் நீயே!
பங்காளி கூடிட படைப்புக்கள் கொண் டாடிட
பணியாரப் பிரியனும் நீயே!
பதினெட்டுப் படியாளும் பக்தரின் காவலா
பாதையெலாம் துணைக்கு வாவா.

வாளாட வேலாட வளர்கொண்டை தானுட
வைகையாள் துள்ளி யாட
வளர்ந்தோங்கும் புஜமாட வயிரமாம் நகையாட
வளர்ந்திட்ட பயிர்கள் ஆட
காலாட மணியாட கருங்கூந்தல் தானுட
கச்சையெலாம் பின்னி ஆட
கண்ணுடப் பெண்ணுடக் கயவர் பயந்தாடக்
கருமீசை முறுக்கி ஆட
கோலாடக் குணமாடக் குதித்தோடி வருகின்ற
குருதியெலாம் ஓடி ஆட
குதிரையின் மேல்வரும் கொள்ளை அழகனைக்
கும்பிடும் கரங்கள் ஆட
பாலாட மேனியும் பழமாடக்காணியும்
பட்டயக் கொலுசு மாட
பதினெட்டுப் படியாளும் பக்தரின் காவலா
பாதையெலாம் துணைக்கு வாவா

கார்வளர் வைரவன் கோயிலமர் முப்பலிக்
கறுப்பருடன் தன்னகரிலே
கருணைதவழ் சப்பாணி நொண்டிபதி னெட்டாய்க்
கருதுபடி நற்கருப்பும்
சீர்வளர் சின்னக் கறுப்பருடன் ஆட்சிகொள்
தேவே மங் கிலிக்காரியும்
திகழ் அடைக்காத்தாள் மின்னஞ் செட்டி
காளியும் சேரமுன் ஆடல் புரிவாய்!
ஏர்வளர் பணியாரம் பாற்சோறு இன்னசுவை
ஏந்திப் படைத்து நின்றோம்
இன்பருள வைரவன் கோயில்சார் தனவணிகர்
ஈண்டிப் பணிந்து நின்றோம்
பேர்வளர் குலதெய்வம் வைரவனும் நீயுமாய்ப்
பெரிதுகாப் பாற்றியருளே
பிறங்கு இராயபுரம் இருந்துவெண் பரிஏறும்
பெரிய கறுப்பண்ண சுவாமி துரையே!

— கவியரசு கண்ணதாசன்

உ
சிவமயம்
ஓம் வல்லப கணபதி துணை

காரண ஆகம முறைப்படி
சிவன் அபிஷேகம் பலன்கள்

1)	வாசனைத் தைலம் & நல்லெண்ணெய்	...	சுகத்தைக் கொடுக்கும்
2)	நல்ல (சாதா) தண்ணீர்	....	சாந்தி (உடல் நலன் தரும்)
3)	பச்சரிசி மாப்பொடி	...	கடனைப் போக்கும்
4)	மஞ்சள் பொடி	...	ராஜ வசியம் தரும்
5)	நெல்லிப்பருப்புப் பொடி திருமஞ்சனப் பொடி	}	ரோகத்தைப் போக்கும்
6)	சஞ்சகவ்வியம்	...	பாபங்களைப் போக்கும்
7)	பால்	...	ஆயுளை விருத்தி செய்யும்
8)	தயிர்	....	புத்ர பலனைக் கொடுக்கும்
9)	தேன்	....	சுகத்தைத் தரும்
10)	நெய்	....	மோக்ஷத்தை தரும்
11)	சர்க்கரை	....	சத்ருவை ஜெயிக்கும்
12)	பஞ்சாமிர்தம்	....	செல்வத்தைத் தரும்
13)	கரும்புச்சாறு	....	ஆரோக்கியத்தைத் தரும்
14)	இளநீர்	....	போக போக்யத்தைக் கொடுக்கும்
15)	வாழைப்பழம்	....	பயிர் விருத்தியாகும்
16)	மாம்பழம்	....	சந்தானத்தைத் தரும்
17)	மாதுளம்பழம்	....	கோபத்தை போக்கும்
18)	பலாப்பழம்	....	மங்கலத்தைத்தரும்
19)	சாத்துக்குடி	...	துக்கத்தைப் போக்கும்
20)	நார்த்தம்பழம்	...	மிருத்யு பயத்தைப் போக்கும்
21)	எலுமிச்சம்பழம்	...	லோக வசியத்தை தரும்
22)	திராட்சை	...	திட சரீரத்தை உண்டு பண்ணும்
23)	சந்தனம்	...	கீர்த்தியைக் கொடுக்கும்
24)	(கும்பம்) ஸ்நபனம்	...	சம்பத்தைத் தரும்
25	விபூதி	...	சகல சௌபாக்கியத்தையும் தரும்
26)	சங்கபிஷேகம்	...	சர்வ புண்யத்தையும் தரும்
27)	தேங்காய் துருவல்	...	அரசுரிமை
28)	கோரோஜனை	...	தீர்க்காயுசு
29)	பச்சைக்கற்பூரம்	...	பயநீக்கம்
30)	பன்னீர்	...	சகல சௌக்கியம்
31)	அன்ன அபிஷேம்	....	ஆயுள் ஆரோக்கியம்
32)	தமரத்தம்பழம்	....	பூமி லாபம்

இவ்விதம் காரணகம சுலோகம் சொல்கிறது

தொகுப்பு :

KR. T. T. சுப்பையா செட்டியார்,
கீழச்சிவல்பட்டி.

மனக்குழப்பம் நீங்கிட :

மாதாச பார்வதி தேவி
பிதா தேவோ மகேச்வர

— சங்கரர்

(மனத்தை ஒரு நிலைப்படுத்தி இப்பாடலைப் பாடினால் மனக்குழப்பம் நீங்கி உள்ளம் தெளிவு பெறும்)

சுகப்பிரசுகத்திற்கு :

ஹே ! சங்கர ஸ்மரஹர ப்ரமதாதி நாத
மன்னாத ஸாம்ப சசிசூட ஹரத்ரிசூலின்
ரம்போ ஸிக்ரஸ வக்ருத் பவமே தயாளோ
ஸ்ரீ மாத்ருபூத, சிவ, பாலய மாம் நமஸ்தே !

(கர்ப்பிணிகள் இப்பாடலை தினம் மூன்று முறை சொல்லி நமஸ்கரித்து வந்தால் ஸ்ரீ தாயுமானவர் கிருபையால் சுகப்பிரசுகம் ஆகி எல்லா நலன்களும் ஏற்படும்)

நாம் செய்யக்கூடாதது

1) தாமரை இலை தவிர வேறு எந்த இலையிலும் பின்புறம் சாப்பிடக் கூடாது,
2) சாப்பிடும்போது நடுநடுவே நீர் பருகலாகாது
3) சுடு சோற்றில் மோர்விட்டு சாப்பிடக்கூடாது
4) ஈரத்துணியுடன் சாப்பிடலாகாது
5) அதிகாலையில் கடினமான உணவை சாப்பிடக்கூடாது
6) மனைவி சாப்பிடும் சமயம் கணவன் பார்க்கக்கூடாது
7) உண்ணும்போது கையை ஊன்றிக்கொண்டு சாப்பிடலாகாது,

(ஜாதகத்தில்) நடந்து வரும் திசைகளுக்கு வணங்குவதற்குரிய தெய்வங்கள்

சூரிய திசை	....	சிவபெருமான் வழிபாடு
சந்திர திசை	....	பௌர்ணமி வழிபாடு, பெருமாள் வழிபாடு
செவ்வாய் திசை	....	முருகன் வழிபாடு
புதன் திசை	....	திருமால் வழிபாடு
குரு திசை	....	பெருமாள் வழிபாடு
சுக்ர திசை	....	லக்ஷிமி வழிபாடு
சனி திசை	....	சனி பகவான் வழிபாடு
ராகு திசை	....	சக்தி வழிபாடு
கேது திசை	....	துர்க்கை வழிபாடு

தொகுப்பு: KR T. T. சுப்பையா செட்டியார்

நகரத்தார் வரலாறு

மகுட, தனவைசிய, பூபால, நாட்டுக் கோட்டை நகரத்தார் எனப் பெயர் பெறும் செட்டிமார்கள் ஆதியில் காஞ்சிபுரத்தில் வாழ்ந்து வத்தவர்கள். காஞ்சிபுரத்தில் உள்ளூர், உள்நாட்டு வாணிகம் செய்பவர்களாகவும், மாமல்லபுரத்தில் உள்ள துறைமுகத்தில் இருந்து மரக்கலம் வழியாக வெளிநாட்டு வாணிகம் செய்பவர் களாகவும் விளங்கியிருக்கின்றுர்கள். அக்காலத்தில் காஞ்சிபுரம் உள்ளிட்ட தொண்டை நாடு முழுவதும் சோழ நாடகவே இருந்தது.

கரிகால் சோழன் காலத்திற்குப் பின்னர் அதாவது சுமார் 2000 ஆண்டுகட்கு முன் வெள்வேற் கிள்ளி என்னும் சோழ மன்னன் ஒருவன் நாக நாட்டைச் சேர்ந்த பீலிவளை என்னும் மன்னனின் மகளை மணக்க ஒரு நிபந்தனை விதித்தான். அதற்கு அம்மன்னனும் இசைந்தான். அதன்படி அம்மாதிற்குப் பிறக்கும் மைந்தனுக்குச் சோழ நாட்டில் பாதியை வழங்க வேண்டும். கருவுற்றதும் அம்மாது நாகநாட்டிற்குச் சென்று விட்டாள். ஆண் குழந்தை பிறந்து தக்க பருவம் வந்ததும் அக்குழந்தையை கப்பல் வாணிகம் செய்யச் சென்றிருந்த ஒரு வணிகர் கூட்டத்தின் மூலம் மன்னன்பால் சேர்பிக்கும்படி அனுப்பி வைத்தாள். அக்குழந்தை வந்த பட குநாகைத் துறைமுகத்தை அடுத்து கடல் அலையால் மொத்துண்டு உடைந்து விட்டது. அப்படகில் இருந்தவர்கள் எப்படியோ உடைந்த படகின் மரத்துண்டு களைப் பிடித்துக் கொண்டு கரை சேர்ந்தனர். பீலிவளையின் மைந்தனும் அவர்களுடன் ஒரு மரத்துண்டைப் பிடித்துக் கொண்டு கரை சேர்ந்தான். அவனை அழைத்து வந்த வணிகர் கூட்டம் அம்மைந்தனை மன்னன் பால் சேர்ப்பித்தனர். அச்சோழனுக்கும், பீலிவளைக்கும் ஏற்பட்ட ஓர் உடன்பாட்டின்படி அம்மைந்தன் கழுத்தில் தொண்டைமாலையுடன் இருந்த இவனை சிற்றலைகள் கரைசேர விட்டதால் அவன்பெயர் ''தொண்டைமான் இளந்திரையன்'' என்ருயிற்று. மன்னனும் நிபந்தனைக்கேற்பச் சோழ நாட்டில் ஒரு பாதியை அவனுக்கு வழங்கினான். தொண்டைமான் ஆண்டதால் தொண்டைநாடு என்று அப்பாதி பிற்காலத்தில் பெயர் பெற்றது. தென்பெண்ணை ஆற்றுக்கு வடக்கே, திருப்பதிக்குத் தெற்கே, கடலுக்கு மேற்கே, பவள மலைக்குக் கிழக்கே இன்நான்குஎல்லைக்குள் உட்பட்ட நாடு தொண்டை நாடாயிற்று.

வெள்வேற்கிள்ளி சோழநாட்டின் வடபகுதியை இளந்திரையனுக்கு வழங்கியபின் காஞ்சியிலிருந்து பலதுறை வாணிகம் செய்து வந்த நம் முன்னோரை அழைத்து அவர்களை எல்லாம் சோழ நாட்டிற்கு வந்து குடியேறித் தம் வாணிகத்தை நடத்தும்படியும் அதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் தான் செய்து தருவதாகவும் கூறினான். அதற்கேற்ப நம்மவர்களும் காஞ்சிபுரத்தை விட்டுப் புறப்பட்டுச் சோழ நாட்டிற்கு வந்து சேர்ந்தனர். சோழ நாட்டில் காவிரிப் பூம்பட்டினம், நாகபட்டினம், காரைக்கால் முதலான நகரங்களில் குடியேறினர்.

காஞ்சிபுரத்திலிருந்து வந்தவர்கள் ஆதலால் இவர்கள் 'நகரத்தார்' என்று பெயர் பெற்றனர். இவர்களில் மிகப்பெரும்பாலோர் காவிரிப் பூம்பட்டினத்திலேயே வசித்து வந்தனர். அங்கு வாழ்ந்து வந்தவர்கள் உள்ளூர்களிலும்,

வெளியூர் சென்றும், பிற மாநிலங்கட்கும், பொதிமாடு, வண்டி, படகுகளின் மூலம் வாணிகம் செய்தும், பிரதேசங்கட்கு மரக் கலங்களின் மூலம் ஏற்றுமதி இறக்குமதி வாணிகம் செய்தும் வளம் பெற்று விளங்கினர்.

இவர்கள் தங்கள் வாணிப முறைகளை மிக்க ஒற்றுமையுடனும் ஒழுங்குடனும் ஆற்றி வந்தனர். பெரும்பாலும் வெளியிடங்களுக்குச் செல்பவர்கள் கூட்டமாகவே செல்வர். வெளியிடம் செல்வோர் 'சாத்து' என்று அழைக்கப்பெற்றனர். பிற நாடுகட்குக் கடல் வழி வாணிகம் செய்தோர் 'மணிக்கிராமம்' என்று அழைக்கப்பெற்றனர். எல்லாவகை வாணிகர்களும் தங்கள் தொழில் செம்மையாக நடைபெற ஏற்படுத்திக் கொண்ட ஓர் அமைப்பு 'நகரம்' எனப் பெயர் பெறும்.

இவர்கள் தங்கள் 'நகரம்' செயல்படுவதற்கு ஒரு பெரிய மாளிகை அமைந்திருந்தனர். அதற்கு இலச்சினையாகச் சித்திர மேழியையும் கொடியாகச் சிங்கத்தையும் கொண்டிருந்தனர். மேலும் தங்கள் நகர மாளிகைக்கு வெள்ளிக் கதவும் அமைத்திருந்தனர்.

மன்னரும் மதிக்கப் பலவகையாலும் சிறந்து விளங்கினர். மன்னருக்கு முடிசூட்டும் பெருமையும் உடையவர்களாய் விளங்கி வந்தனர். பல அறப்பணிகளையும் ஆற்றி கொடைநலம் படைத்திருந்தனர். இவர்களின் கொடைச் சிறப்பையும், நடைச் சிறப்பையும், நேர்மையும் பற்றிய பலப்பல பாடல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று.

''ஈட்டிய எல்லாம்
இதன்பொருட்டு என்பது
காட்டிய கைவண்மை
காட்டினார் வேட்டோறும்
காமருதோள் சென்னி
கடல்சூழ் புகார்வணிகர்
தாமரையும் சங்கும்போல் தந்து''

இங்ஙனம் இவர்களின் சிறந்த வாழ்வு சுமார் ஏழெட்டு நூற்றாண்டுகட்கு மேல் காவிரிபூம்பட்டினமாகிய பூம்புகாரில் விளங்கிற்று. அதன் பிறகு, சுமார் கி· பி. 10 ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டை ஆண்ட மன்னனுக்கும் நகரத்தார்கட்கும் விரோதம் ஏற்பட்டது. அதற்குக் காரணம் பலவாருக சொல்லப்படுகிறது.

1. இவர்கள் கொடைச் சிறப்பால் ஏற்பட்ட பொருமை.
2. இவர்கள் தங்கள் நகர மாளிகைக்கு வெள்ளிக் கதவு அமைத்தது.
3. காவிரியாறு பெருக்கெடுத்த பொழுதோ அல்லது கடல் பொங்கி எழுந்த பொழுதோ மன்னன் செய்வதறியாது மயங்கி நிற்க வெள்ளத்தைத் தடுத்த நிலைமையால் தனக்குக் குறைவை ஏற்படுத்திவிட்டதாக கருதி அதன் காரணமாகக் கொண்ட வெறுப்பு.

4. தெருவில் விளையாடிக் கொண்டிருந்த நகரத்தார் வீட்டுப் பெண் குழந்தையின் அழகில் ஈடுபட்டு உலா வந்த மன்னன் எடுத்து முத்தமிட அச்செயலை நகரத்தார் கண்டித்ததால் மன்னனுக்கு ஏற்பட்ட சினம்.

5. இப்படியான பல காரணங்களால் அக்கால மன்னனுக்கும் நகரத்தார்க்கும் இடையில் உண்டான மனக்கசப்பு, பகை, உள் உணர்வாக மாறி விட்டது. அந்தநிலை நாளுக்கு நாள் வளர்ந்ததேயன்றி குறைந்து ஒரு சுமூக நிலை ஏற்பட வழி பிறக்கவில்லை. அரசனும் கடுமையாக இருந்தான். நகரத்தாரும் தன்மான உணர்வால் பிடிவாதமாக இருந்தனர்.

இச்செய்கை உணர்வாலும் அச்சத்தாலும் மன்னன் தங்களைத் தண்டிக்கக் கூடுமென அஞ்சி தீக்குளித்தோ அல்லது மன்னனுல் தண்டிக்கப்பட்டோ மிகப் பெரும்பாலான நகரத்தார்கள் உயிர்விட்டனர். இஃது எவ்வளவு உண்மை எனத் துனியத் தக்க சான்றுகள் இன்று கிடைக்குமாறில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட தொகையினர் சோழ நாட்டை விட்டு வெளியேறிப் பாண்டி நாடு சேர்ந்தனர். அப்படி வந்தவர் தொகை ஐந்நூறு என்று துணிய முடிகிறது. நகரத்தார்க்கு 'ஐந்நூற்றுவர்' என்ற பெயர் இருப்பதாலும் இவர்கள் வசித்த பகுதி ஐந்நூற்றுவப் பெருந்தெரு என்று கல்வெட்டுகள் கூறுவதாலும் இங்ஙனம் முடிவு செய்வது எளியதாகவும் சரியாகவும் இருக்கிறது.

இங்ஙனம் நாடு பெயர்ந்து வந்தவர்கள் யாவரும் நாட்டரசன் கோட்டையில் சிலகாலம் ஒருங்கிருந்து வாழ்ந்தனர். இஃது கி. பி. 10ம் நூற்றாண்டில் என்று கணிக்கமுடிகிறது. அக்காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த வீரபாண்டியன் முதலியோரிடம் வேண்டி ஏழு கோயில்களைப் பெற்று அவற்றை தத்தம் கோத்திரமாகக்கொண்டு அங்கு குடியேறியும், வழிபட்டும் வந்திருக்கின்றனர்.

அவையாவன;

1. மாத்தூர் 2. இளையாத்தங்குடி 3. வயிரவன்கோயில் 4. நேமம் 5. இலுப்பைக்குடி 6. சூரக்குடி 7. வேலன்குடி ஆகியவையாகும்.

இரணியூர், பிள்ளையார்பட்டி ஆகிய இரு கோவிலாரும் திருவேட்பூருடையார் எனப் பெயருடைய ஒரே பிரிவாக் இளையாற்றங்குடியில் விளங்கி வந்திருக்கின்றனர்.

ஆகவே தான் நகரத்தார்களை ஏழகத்தார் என்றும், ஏழுவழியினர் என்றும் வழங்கி வத்திருக்கின்றனர். கல் வெட்டுகளிலும் ஏழகத்தார் என்று காணப்படுகிறது. இவர்களில் காப்புப் படைக்கு 'ஏழகப்படை' என்ற பெயரும் காணப்படுகிறது. அந்த ஏழகப்படை இருந்த இடம் காரைக்குடியை அடுத்த கழனிவாசலாகும். கழநிவாசலுக்குப் பழைய பெயர் 'ஏழகப்பெருந் தெரு' என்பதாகும். வயிரவன் கோவிலாரின் கோத்திரப் பெயர் ''ஏழகப்பெருந் தெருவான வீர பாண்டிய புரமுடையார்'' என்பதும் இன்றும் அங்குள்ள பெருமாள் கோவிலுக்கு

ஏழகப்பெருமாள் விண்ணகரம் என்பதும் குறிப்பிடத் தக்கவையாகும். நகரத்தார்க்குப் படையுண்டா என்று சிலர் ஐயுரலாம். உண்டு. நிச்சயம் உண்டு. நாடு காக்க மன்னர் படை வைத்திருப்பர். வாணிகப் பொருள் காக்க வாணிகர்கள் படை வைத்திருப்பர். எனவே தான் தொல்காப்பியம்.

''இடைஇரு வகையோர்
அல்லது நாடின்
படைவகை பெறுர்
என்மனுர் புலவர்'' - மரபு 77

எனக் குறிப்பிடுகிறது. இடை இருவகையோர் என்றால் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகையில், தலையும் கடையும் ஆகிய அந்தணர், வேளாளர் இருவகையும் நீக்கிவிட்டு அரசர்கள் வணிகர் ஆகிய இரு இடைவகையார் என்று தானே கொள்ள வேண்டும்.

ஐந்நூற்றுவர் என்பது நகரத்தார்க்குரிய பெயர் என்பதாலன்றோ மாற்றூர்ப் பெருமாள் ''ஐந்நூற்றீஸ்வரர்'' என்று பெயர் பெற்று உள்ளனர். நானோதேசங்கட்கும் சென்று வணிகம் செய்பவர்கள் ஆனதால் 'நாணுதேசிகன்' என்றும் 'தேசி' என்றும் நகரத்தார் பெயர் பெறுவர், ஆதனாலேயே பிள்ளையார் பட்டிப் பெருமான் 'தேசி விநாயகப் பிள்ளையார்' என்றும், சூரக்குடிப் பெருமான் ''தேசிகநாதர்'' என்றும் பெயர் பெறுவராயினர்.

சுமார் 12-ம் நூற்றாண்டை ஒட்டி திருவேட்புருடையர் பிரிவினராகிய இரணியூராரும் பிள்ளையார்பட்டியாரும் தம்முள் புள்ளி எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இளையாத்தங்குடிக் கோவிலிலிருந்து பிரிந்து பாண்டியனிடம் வேண்டி முறையே இரணியூரையும், பிள்ளையார் பட்டியையும் பெற்று அங்கு குடியேறி கோவில் எடுத்து வழிபட்டு வாழ்ந்து வந்திருக்கின்றனர். இதற்குத் தக்க அசைக்க முடியாத சான்றாகப் பிள்ளையார்ப்பட்டிக் கல்வெட்டு விளங்குகிறது. காரைக்குடி ஐந்நூற்றுவப் பெருந்தெருவில் உள்ள நகரத்தாருக்கு விற்று விலைப் பிரமாணம் செய்து கொடுத்த செய்தி குடைவரைக் கோவிலில் உள்ள கல்வெட்டுகளால் நன்குப் புலப்படுகிறது. இஃது சுமார் 12ம் நூற்றாண்டில் என்று அறிய முடிகிறது.

நாளாவட்டத்தில் ஒன்பது கோவில் உள்ள ஊர்களில் வசித்த நகரத்தார்கள் வெவ்வேறு ஊர்களில் சென்று வசிக்கலாயினர். அப்படிக் குடியேறியவர்களின் ஊர்கள் தொண்ணூற்று ஆறு ஆகும். எனவே தொண்ணூற்றாரூர் நகரத்தார் எனப் பிற்காலத்தில் பெயர் பெற்றனர்.

அந்தத் தொண்ணூற்றாரூரில் வாரிவயல், பொய்யனார், சிவரகோட்டை ஆலங்குடி, மேல மரகாணம் கூத்தலூர், ஆர்க்காடு, வித்ராவயல், சித்தாட்டிவயல் நெய்வாசல், இளையாத்தங்குடி, வயிரவம்பட்டி நேமம், இரணியூர், குறட்டி தட்டட்டி, கம்பனூர், இலுப்பைக்குடி, மாத்தூர், கீரணிப்பட்டி, சேர்ந்தனி, எழுவன்கோட்டை, கீழக்கோட்டை ஆகிய ஊர்களில் தற்பொழுது நகரத்தார்கள் வசிக்கவில்லை.

நாட்டரசன்கோட்டை சேர்ந்து ஊரமைத்துக் குடியேறிய நகரத்தார்கள் காவிரிப்பூம்பட்டினத்தை போலவே நகர நிர்மணம் செய்திருக்கின்றனர். ஊரின் நடுவில் பெருஞ்சதுக்கம் அமைத்து அதில் பல திருக்கோவில்களையும் எடுத்து அதைச் சுற்றி வீடுகள் கட்டிக் கொண்டிருப்பதை இன்னும் காணலாம். காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து வரும் போது தங்களுடன் உவச்சர்களையும் அழைத்து வந்து கண்ணகித் தாய்க்குப்பீடம் அமைத்துக் கோவில் எடுத்து வழிபட்டு வந்திருக்கின்றனர். அதுவே கண்ணாத்தாள் அல்லது கண்ணுடைய அம்மன் கோவிலாக இன்று விளங்குகிறது.

உவச்சர்கள் பலர் இங்கிருப்பதாலும், அவர்களில் சிலர் தம் உறவினர் களாகவோ, நண்பர்களாகவோ, இருந்ததாலுமே தான் கவிச்சக்கரவர்த்தி நாட்டரசன் கோட்டைக்கு வந்து தங்கியிருக்க வேண்டும். தங்கியிருந்த காலத்தில் மரணம் எய்தியதால் கம்பனின் பூத உடலுக்கு பள்ளி படைக்கோவில் நாட்டரசன் கோட்டையில் ஏற்பட்டிருக்கிறது. அதையும் நம் நகரத்தார் குடும்பமே பரிபாலித்து வருவது குறிப்பிடத்தக்கது.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வந்தவர்களில் நம்மவர்கள் இடையில் புலால் உணவு உட்கொண்டதாலோ அல்லது வேறு காரணத்தாலோ தனித்து விடப்பெற்றனர். மற்றையோர் மதுரை வழியாக மேலும் தெற்கு நோக்கிச் சென்றனர். அவர்களில் அரியூராரும் இங்ஙனமே இடையில் விடப் பெற்றனர். அவர்கள் பிரான்மலையைச் சுற்றிய ஊர்களில் குடியேறிப் பிரான்மலைக் கொடுங் குன்றீசரைக் குலதெய்வமாகக் கொண்டு வாழ்ந்து வருவாராயினர்.

இங்ஙனமே சுந்தரர் என்ற பிரிவாரும் மதுரைக்குப் பக்கத்தில் சிறுகுடி முதலிய கிராமங்களில் குடியேறி வாழ்வாராயினர்.

எஞ்சிய நகரத்தார்கள் நாகர்கோவில் கோட்டாறுப் பகுதியில் குடியேறினர். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கொண்டு வந்த மரகதப் பிள்ளை யாரைக் கோட்டாற்றில் பிரதிஷ்டை செய்து வழிபடுவாராயினர். அக்கோவில் உள்ள தெரு செட்டித்தெரு எனப்படுகிறது. அங்குள்ள பிள்ளையார் பெயர் 'தேசிக விநாயகர்' என்பதாகும். இன்றும் அக்கோவில் மிகச் சிறப்பாக விளங்கி வருவதைக் காணலாம்.

பாண்டி நாட்டிற்கு வந்த நம்மவர்கள் தொழில் நிமித்தமாகப் பல நாடு கட்கும் கடல் கடந்தும் சென்று வந்தனர். தலைப்பில் நாகை, திருநெல்வேலி, சென்னை, மதுரை முதலான தமிழ்நாட்டுப் பகுதிகட்கும் பின்னர் வங்காளம், கஞ்சம் முதலிய வெளி மாநிலங்கட்கும் பிறகு யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய பகுதிகட்கும் அதன் பிறகு பர்மா, மலேசியா, சிங்கப்பூர், செய்கோன், மைடான் முதலான இடங்கட்கும் சென்று தொழில் செய்து வந்தனர்.

முதலில் பண்டங்கள் வாங்கி விற்பதையே தொழிலாகக்கொண்டிருந்தனர். பின்னர் நாளாவட்டத்தில் பல்வேறு காரணங்களால் பணம் கொடுக்கல் வாங்கல் தொழில் முறையில் ஈடுபட்டனர். ஆனாலும் பழைய முறைப்படியே கொண்டு விற்கப் போய் வருவதாகவே கூறி வந்தனர்.

நகரத்தார்களின் தொழில் முறையையும் கணக்கெழுதும் முறையையும் நாணயத்தையும் பற்றி பல்வேறு நீதிமன்றத் தீர்ப்புக்கள் மட்டுமின்றி ஆங்கிலேய அரசால் நியமிக்கப்பட்ட 'பாங்கிங் எங்க்வோயரிங் கமிஷன்' என்ற பெரிய விசாரனைக் குழுவும் மிகச் சிறப்பாகப் பாராட்டியிருக்கக் காணலாம்.

காணிகாணியாய்த் தேடிக் கோடி கோடியாகத் தருமம் செய்த சமூகம் என்று நகரத்தார் சமூகத்தை நல்லோர் எல்லாம் பாராட்டிடுவர். மூவேந்தர் ஆட்சி முடிந்து பிறமதத்தவர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஏராளமான ஆலயங்களைத் திருப்பணி செய்து ஆலயங்கள் அழியாமல் காத்தனர். ஆலயங்கள் மட்டுமின்றி பாடசாலைகள், பசுமடங்கள், சத்திரங்கள், மருத்துவசாலைகள் முதலியனவும் தோற்றுவித்து நலம் புரிந்து வந்தனர்.

தற்பொழுது நகரத்தார்களில் பலர் பள்ளிக்கூடம், கல்லூரி, மருத்துவ மனை, பல்கலைக் கழகம் போன்ற காலத்திற்கேற்ற அறங்களிலும் ஈடுபட்டுப் பயன் சுரந்து வருகின்றனர். மக்கள் தொகையால் சிறிய சமூகமே ஆனாலும் அறப்பணிகளால் உலகறிந்த ஒரு சமூகமாகத் திகழ்கிறது. நகரத்தார் சமூகம் காசி முதல் ராமேஸ்வரம் வரை இவர்களின் அறப்பணி இல்லாத இடமே இல்லை என்னும்படி எல்லா இடங்களிலும் இவர்களின் நற்றொண்டு நாளும் மலர்ந்து மணம் பரப்பி வருகிறது.

வெளியிடங்களில் மட்டுமின்றித் தாங்கள் நிரந்தரமாக வசிக்கும் ஊர்களிலும் சிவன் கோவில் எடுத்து அருமையாக அறத்தொண்டு புரிந்து வருவது கண்கூடு. அப்படி அமைக்கப்படும் கோவில்கள் யாவும் மதுரை மரபையொட்டி 'மீனாட்சி சுந்தரேஸ்வரர்' கோயில்களாகவே இருக்கக் காணலாம்.

வாழ்க நகரத்தார் சமூகம்!
வளர்க அவர்தம் அறப்பணிகள்!

தொகுப்பு

தே. நாகப்பன், நா. நாச்சியப்பன், மு. நாகப்பன்
மேலைச்சிவபுரி.

உ

கறுப்பர் வாரார்

வாராரய்யா வாராரு
கறுப்பரிங்கே வாராரு
வாராரய்யா வாராரு
கறுப்பரிங்கே வாராரு
அள்ளீ - முடிச்ச கொண்டையப்பா
அழகு மீசை துள்ளுதப்பா
வல்ல வேட்டிப் பட்டுடனே
வாரார் - ஐயா ராசாப்போலே

(வாராரய்யா வாராரு)

ஆளு - யரம் அரிவாளாம்
அதுக் - கேத்த கம்பீரமாம்
காலிலே - முள்ளுச் செருப்பாம்
கறுப்பனுக்கே தனிச்சிறப்பாம்

(வாராரய்யா வாராரு)

வீச்சரிவாள் கையிலுண்டு
வேகமான குதிரையுண்டு
சுற்றிவரும் பகையழிக்கச்
சுக்குமாந் தடியுமுண்டு

(வாராரய்யா வாராரு)

இடுப்பிலே சலங்கையுண்டு
இடிமுழக்கச் சிரிப்புமுண்டு
வாக்கிலே வலிமையுண்டு
வற்றாத கருணையுண்டு

(வாராரய்யா வாராரு)

கையிலே சவுக்குமுண்டு
கனகமணிச் சலங்கையுண்டு
பாற்கடலில் பள்ளிகொண்ட
பரந்தாமன் நாமமுண்டு

(வாராரய்யா வாராரு)

சந்தனமுண்டு ஜவ்வாதுண்டு
சாம்பிராணி வாசமுண்டு
சம்பங்கி ரோஜாமுல்லை
மணக்குதப்பா இங்கே இப்போ...

(வாராரய்யா வாராரு)

கவிஞர் A. R. சுப்பையா
நேமத்தான்பட்டி.

நகரக் கோவில்கள் ஒன்பது

1) இளையாற்றக்குடிக் கோவில் :

சுவாமி பெயர் கைலாசநாதர்

அம்மை பெயர் நித்யகல்யானி

இதன் உட்பிரிவுகள்

கல்வாசநாட்டில் இளையாற்றங் குடியான

குலசேகரபுரத்தில்

1 ஒக்கூருடையார்
2 அரும்பார் கிளையாரான பட்டணசாமியார்
3 பெருமருதூ ருடையார்
4 கழனிவாசக் குடியார்
5 சிங்கினிக் கூருடையார்
6 பேரசெந்தூ ருடையார்
7 சிறுசேத்தூ ருடையார் ஆக வகை 7

---

2) மாற்றூர்க் கோவில் :

சுவாமி பெயர் ஐந்நூற்றீசர்

அம்மை பெயர் பெரியநாயகி

இதன் உட்பிரிவுகள்

கேரளசிங்க வளநாடாகிய

பிரம்பூர் நாட்டில்

மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்

1 உறையூருடையார்
2 அரும்பாக் கூருடையார்
3 மணலூ ருடையார்
4 மண்ணூ ருடையார்
5 கண்ணூருடையார்
6 கருப்பூருடையார்
7 குளத்தூ ருடையார் ஆக வகை 7

3) வயிரவன் கோயில் :

சுவாமி பெயர் வளரொளி நாதர்

அம்மை பெயர் வடிவுடையம்மை

இதன் உட்பிரிவுகள்

கேரளசிங்க வளநாடாகிய
ஏழகப் பெருந்திருவான
வீரபாண்டியபுரத்தில்

1 சிறுகுளத்தூ ருடையார்
2 கழனிவா சலுடையார்
3 மருதேந்திர புரமுடையார் ஆக வகை 3

இதில் 1-வது சிறுகுளத்தூ ருடையார் வகுப்பில் மூன்று பிரிவுகள். அதாவது

1 பெரிய வகுப்பு
2 தெய்யனூர் வகுப்பு
(தெய்வ நாயகர் வகுப்பு)
3 பிள்ளையார் வகுப்பு

4) இரனிக் கோயில் :

சுவாமி பெயர் ஆட்கொண்டநாதர்
அம்மை பெயர் சிவபுரந்தேவி

கல்வாசனாட்டில் இளையாற்றக் குடியான குலசேகரபுரத்தில்
இரணியூர் மருதங்குடியான்
ராஜநாராயணபுரத்தில்

1 இரணியூர்த் திருவேட்பூருடையார்

5) பிள்ளையார்பட்டிக் கோயில் :

கற்பக விநாயகர்

சுவாமி பெயர்	அம்மை பெயர்
திருவீசர்	சிவகாமவல்லி
மருதீசர்	வாடாமலர் மங்கை

கல்வாசனாட்டில் இளையாற்றக் குடியான குலசேகரபுரத்தில்
இரணியூர் மருதங்குடியான
ராஜநாராயணபுரத்தில்

1 பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையார்

6) நேமங் கோவில் :

சுவாமி பெயர் ஜெயங்கொண்ட சோளீசர்
அம்மை பெயர் சவுந்தரநாயகி

கேரளசிங்க வளநாடாகிய நேமமான

குலசேகரபுரத்தில் தேனூறு பாயும்

1 இள நலமுடையார்

7) இலுப்பைக் குடிக்கோவில் :

சுவாமி பெயர் தான்றேன்றியீசர்

அம்மை பெயர் சவுந்தரநாயகி

கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில் இலுப்பைக் குடியான புகழிடங் கொடுத்த பட்டினத்தில்

1 சூடாமணி புரமுடையார்

8) சூரைக்குடிக் கோவில் :

சுவாமி பெயர் தேசிக நாதர்

அம்மை பெயர் ஆவுடை நாயகி

கேரளசிங்க வளநாடாகிய சூரைக்குடியான

தேசிக நாருயணபுரத்தில்

1 புகழ் வேண்டிய பாக்கமுடையார்

9) வேலங்குடிக் கோவில் :

சுவாமி பெயர் கண்டீசுவரர்

அம்மை பெயர் காமாட்சியம்மை

கேரளசிங்க வளநாடாகிய பாலையூச் நாட்டில்

வேலங்குடியான

தேசிக நாருயணபுரத்தில்

1 கழனிநல்லூ ருடையார்

நகரத்தார் சங்க, விடுதி முகவரிகள்

1 நகரத்தார் ஐக்கிய சங்கம் (நகர விடுதி)
88, பவளக்காரத் தெரு, சென்னை-600 001.

2 நகரத்தார் சங்கம் (நகர விடுதி)
23-24, கௌலிபிரவுன் சாலை, ஆர். எஸ். புரம்
கோயம்புத்தூர்-641 002

3 நகரத்தார் சங்கம் (நகர விடுதி)
377-பி, பாம்பாட்டித் தெரு, கீழவாசல் தஞ்சாவூர்-610 001

4 நகரத்தார் சங்கம் (நகர விடுதி)
2, ஒத்தமால் தெரு, திருச்சி-620 002

5 நகரத்தார் சங்கம் (நகரவிடுதி)
25, வடக்குச்சித்திரை வீதி, மதுரை-625 001

6 நகரத்தார் சங்கம்
9, மண்டபம் ரோடு, ஈரோடு-638 001

7 நகரத்தார் சங்கம்
பி-9 ஃபேர்லாண்ட்ஸ், சேலம்-636 004

8 நகரத்தார் சங்கம்
45, கேபிளன் காலனி முதல் தெரு திருப்பூர்-638 601

9 நகரத்தார் சங்கம் (நகர விடுதி)
6, பேறிஞர் அண்ணு மேலத் தெரு,
திருநெல்வேலி டவுன்-627 006

10 நகரத்தார் சங்கம்
97, கடைத்தெரு பொள்ளாச்சி-642 001

11 நகரத்தார் சங்கம்
பழனியப்பா இல்லம் 15, ராமசாமி தெரு
மணப்பாறை-621 306

12 நகரத்தார் சங்கம்
நாராயணு மெடிக்கல்ஸ் 138, இரண்டாவது தெரு
மயிலாடுதுறை-609 001

13 நகரத்தார் சங்கம்
ஸ்ரீ மீனும்பிகா அன் கோ, தலையாரித் தெரு,
பட்டுக்கோட்டை-614 601

14 நகரத்தார் சங்கம்
49, மார்த்தாண்டபுரம் முதல் வீதி, புதுக்கோட்டை-622 001

15 நகரத்தார் அறப்பணிக் கழகம்
75, காந்தி ரோடு, மன்னார்குடி-614 001

16 நகரத்தார் சங்கம்
114, நேருஜி தெரு, விழுப்புரம்-605 602

17 நகரத்தார் சங்கம்
18-ஏ சங்கர நாயுடு தெரு கடலூர்-607 002

18 நகரத்தார் சங்கம்
35, டி. பி ரோடு, கோயில் தெரு, சிதம்பரம்-608 001

19 நகரத்தார் சங்கம்
18, சங்கிலித்தேவர் தெரு பழனி-624 001

20 நகரத்தார் சங்கம்
20, மேற்கு கோட்டைத் தெரு, விருத்தாசலம்-606 001

21 நகரத்தார் சங்கம்
51, தெற்கு தெரு, கரூர்-639 001

22 நகரத்தார் சங்கம்
226, தெற்கு புதுத் தெரு, தூத்துக்குடி-628 002

23 நகரத்தார் சங்கம்
3, மலை ஈஸ்வரன் சன்னதி. நாகப்பட்டினம்-611 001

24 நகரத்தார் சங்கம்
20, 7வது கீழமெயின் ரோடு, காந்தி நகர், வேலூர்-632 006

2. நகரத்தார் பண்பாட்டுக் கழகம்
302-சி, வட்டம் 5, நெய்வேலி-607 803

26 நகரத்தார் சங்கம்
13, காமாட்சி ஜோஸ்யர் தெரு. கும்பகோணம்-612 001
தஞ்சை மாவட்டம்

27 நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம்
18. சத்தியமூர்த்தி தெரு, சிவகங்கை-623 560
பசும்பொன் மாவட்டம்

28 நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம்
12-சி, சர்தார் வீதி உடுமலைப்பேட்டை

29 நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம்
115, கீழரத வீதி, சிவகாசி-626 123

30 நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம்
9, வாழைக்குளம் தெரு, ஸ்ரீவில்லிப்புத்தூர்

31 நகரத்தார் இளைஞர் சங்கம்
20, வாகீச நகர், சிதம்பரம் - .508 001

32 நகர விடுதி
125, சன்னதி தெரு, திருச்செந்தூர் - 628 215

33 கர்நாடகா நகரத்தார் சங்கம்
47, தெற்கு கடைசி வீதி பசவாங்குடி பெங்களூர் . 560 004

34 டெல்லி நகரத்தார் சங்கம்
4/18 டபுள்யு ஈ. ஏ கரோல்பாக், நியூடெல்கி - 110 005

35 நகரத்தார் சங்கம்
3சி / 1463, குறியாத்தி ரோடு, திருவனந்தபுரம்-695 009

36 நகரத்தார் மன்றம்
16, கீழ் கடற்கரைச் சாலை, திருவான்மியூர்,
சென்னை - 600 041

37 வளசரவாக்கம் நகரத்தார் சங்கம்
114, டாக்டர் சர். சி. வி. ராமன் தெரு, இராமகிருஷ்ண நகர்
சென்னை - 600 087

38 நகரத்தார் சங்கம்
44, பெரியார் நகர், திருவெற்றியூர், சென்னை - 600 019

39 நகரத்தார் சங்கம்
சொர்ணலட்சுமி, பிளாட் 1, 2, நாகப்பா நகர்,
குரோம்பேட்டை சென்னை - 600 044

40 நகரத்தார் சங்கம்
26 / 9, என். எம். ரோடு, கன்னிகாபுரம், சென்னை-600 054

41 நகரத்தார் நற்பணி மன்றம்
19, அண்ணசாலை, அண்ணநகர், புழல், சென்னை - 600066

42 நகரத்தார் மன்றம்
88-பி கிருஷ்ணகுமார் தெரு, கிருஷ்ணபுரம், அம்பத்தூர்
சென்னை - 600 053

43 நகரத்தார் இளைஞர் நற்பணி மன்றம்
10, காட்ராக் காலனி, கிட்லபாக்கம், சென்னை.600 064

44 பொன். புதுப்பட்டி நகரத்தார் பொது நல மன்றம்
55, ஆண்டரசன் தெரு (முதல்மாடி) சென்னை - 600 001

45 நகரத்தார் நற்பணி மன்றம்
5, வேங்கீஸ்வரர் நகர், முதல் மெயின் ரோடு, வடபழனி
சென்னை - 600 026

46 ஸ்ரீ காசி நாட்டுகோட்டை நகர சத்திரம்
குட்கோவிலா வாரணசி - 221 001 (உ. பி)

47 நாட்டுக்கோட்டை நகர சத்திரம்
140-மோரி தாராகினி (பி. ஓ) அலகாபாத் 211 006 (உ. பி)

48 நாட்டுக்கோட்டை நகர சத்திரம்
நாட்கோட் ஸ்ரீராம் மந்திர், பூ பஜார், அயோத்தியா-224 123
பைசாபாத் (உ. பி)

49 நாட்டுக்கோட்டை நகர சத்திரம்
நம்பர் 171, சாண்ட், கோவர்கயா-823 001, பீகார் (ஸ்டேட்)

50 நகரத்தார் ஹவுஸ்
34, ஈஜ்ரா தெரு, கல்கத்தா-700 001, மேற்கு வங்காளம்.

51 நகர மடம்
தாராகேஸ்வர் (கல்கத்தா அருகில்) மேற்கு வங்காளம்

52 நாட்டுக்கோட்டை நகர சத்திரம்
கார்த்திக்சாமி மந்திர், சானிசோவாக் பஞ்சவடி
(நாசிக் - 422 003) மகாராஷ்டிரா

53 நகரத்தார் சங்கம்
திருமண மண்டபம்
1-2, நகர மடத்து சந்து, திருமஞ்சன வீதி,
திருவாரூர் - 610 002

54 நகரத்தார் சங்கம்
33, தலையாரி தெரு, பட்டுக்கோட்டை - 614 601

55 நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம்
106, ஒயா மடம், திருவூடல் தெரு,
திருவண்ணுமலை - 606 601

தொகுப்பு : தே. நாகப்பன் மேலைச்சிவபுரி

நவக்கிரக வழிபாடு

1 சனீஸ்வரன்:

சங்கடந் திர்க்கும் சனிபக வானே
மங்கலம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சர வின்றி சனீஸ்வர தேவே
இச்செகம் வாழ இன்னருள் தாதா

2 கேது:

கேதுத் தேவே கீர்த்திக் தருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்;
வாதம் வம்பு வழக்கு களின்றி
கேதுத் தேவே கேன்மை யாய்ரட்சி:

3 வியாழன்:

குணமிகு வியாழக் குணபக வானே:
மனமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
பிரகஸ்ப் பதிவியாழப் பரகுரு நேசா;
கிரகதோ சமன்றிக் கடாட்சித் தருள்வாய்

4 புதன்:

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபக வானே பொன்னடி போற்றி
புதந்தந் தருள்வாய் பண் ணொலியானே
உதவியே யாளும் உத்தமா போற்றி

5 வெள்ளி:

சுக்கிர மூர்த்தி சுபசுக மீவாய்
வக்கிர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே

6 சூரியன்:

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சந்திரா போற்றி
விரியா போற்றி வினைகள் களைவாய்

7 சந்திரன்:

எங்கள் குறைகள் எல்லாந் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சர்குணா போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுராய் போற்றி

8 செவ்வாய்:

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு

9 இராகு:

அரவெனும் இராகு ஐயனே போற்றி
கரவாதருள் வாய் கஷ்டங்கள் நீக்கு
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி

தொகுப்பு: நா. சாந்தா நாகப்பன்
மேலச்சிவபுரி

துளசியின் மகிமை

எல்லா வைணவத் தலங்களிலும் துளசி அர்ச்சனை தான் முதலிடம் பெறுகிறது. காலையிலும் மாலையிலும் துளசிச் செடிக்கு நீர் ஊற்றி கோலமிட்டு விளக்கேற்றி வலம் வருவதை நம் இந்துக்களின் குடும்பங்களில் மரபாகக் கொண்டுள்ளோம். உலகமே நீ தான். அதில் ஒரு புள்ளியாய் இருக்கின்றேன். என்னை நீ ரட்சிப்பாய் என்ற சரணாகதி தத்துவத்தின்படி நமது வழிபாடுகளில் வலம் வருகிறோம்.

துளசிச் செடியின் நறுமணம் காற்றுவழி வந்து அதை நாம் நுகரும்போது நாசி வழியே உடலின் உட்புறம் நறுமணம் பரவுகிறது. இந்திய மருத்துவ முறைப்படி துளசிச்சாறு நெஞ்சில் கட்டும் கபத்தை கலைக்கும் தன்மை பெற்றதால் சின்னஞ்சிறு குழந்தைகளில் இருந்து முதியோர் வரையில் சளி பிடித்தவுடன் துளசிச் சாற்றைக் கொடுத்து விடுகிறார்கள்.

எல்லா ஸ்தனகளித்து துளசி இல்லாத பூஜை கொள்ளனோ ஹரி கொள்ளவோ' என்று புரந்தரதாஸர் கூறியுள்ளார்.

சமூகத்தின் பொதுவிடமாகத் தோன்றும் கோயில்களில் பக்தர்களின் நலத்தை நாடி வருவோர்க்கெல்லாம், துளசித் தீர்த்தத்தைக் கொடுக்கிருர்கள். துளசித் தீர்த்தம் ஜீரணத்தைப் பெருக்கும் சக்தியை உடையது என்பது உண்மை. இரத்த ஒட்டத்தை சீர்படுத்தி உடற்கட்டு குலேயாமல் இருப்பதற்கு காலேயிலும் மாலேயிலும் துளசி மடத்தை வலம் வருவது நலமாகும் துளசிச் செடியின் நறுமணத்தை சுவாசிப்பது என்பது மருத்துவ முறைப்படி சீரான உடற்பயிற்சியாகும்.

ஞாயிறு. திங்கள், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் திருவோண நட்சத்திரங்களிலும் அஷ்டமி, துவாதசி. பௌர்ணமி அமாவாசை நாட்களிலும் மாலே, இரவு வேளேகளிலும் துளசிச் செடியிலிருந்து துளசி பத்ரம் எடுக்க லாகாது. கருந்துளசி பூஜைக்கு விசேஷம். திருமணமாகாத பெண்கள் துளசி பூஜை செய்தால் ஸ்ரீ இராமனைப்போல் கணவன் கிடைப்பான் என்று பெரியோர்கள் கூறுவார்கள்,

மனம் அமைதி அடைவது எப்படி?

முதலாவதாக பேச்சை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்க வேண்டும்.

இரண்டாவதாக அந்த நேரத்தில் என்ன செய்துகொண்டிருக்கிரேமோ அதைப்பற்றி மட்டுமே நினேக்க வேண்டும். ஏற்கனவே செய்துவிட்டதைப் பற்றியோ இனி செய்ய வேண்டியதைப்பற்றியோ நினேக்கக்கூடாது. கடந்து போனதைப்பற்றி வருந்துவதோ, வரப்போவதைப்பற்றிக் கற்பனே செய்வதோ கூடாது உன்னுல் முடிந்த மட்டும் உனது சிந்தனேகளிலிருந்து தோல்வி மனப்பான்மையை தவிர்த்து நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கை உடையவ னாக உன்னே மாற்று. மன அமைதி படிப்படியாக வரும் வலிந்து முயலாதே எப்போதும் அமைதியோடும் தன்னம்பிக்கையோடும் இருக்க வேண்டும்.

பெண்ணின் பெருமை

உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத பெருமதிப்பு இந்த நாட்டிலே பெண்களுக்கு உண்டு. குழந்தை பருவத்திலே-ஒரு வயது முதல் பெண்களே அம்பாளாக பாவித்து நவராத்திரி சமயத்தில் பூஜை செய்யும்படியாக சொல்லப் பட்டிருக்கிறது. மணமான பின்பு தம்பதிகளேயே வைத்து லெக்ஷிமி நாராயண ராக பாவித்து தம்பதி பூஜை செய்யச் சொல்லப்பட்டிருக்கிறது, இவ்வகை புனிதத்துவம் பெண்களுக்கு எந்த நாட்டிலும் எந்த மதத்திலும் கொடுக்கப்பட வில்லே.

ஒவ்வொரு நாளும் காலே எழுந்தவுடன் இரண்டு உள்ளங் கைகளேயும் உரசிப் பார்த்துவிட்டு உள்ளங்கையின் நுனிப்பாகத்தில் பொருளாதாரத்திற்கு அதிதேவதையான லெக்ஷ்மி தேவியின் சக்தியையும் உள்ளங்கை மத்தியில் கல்விக்கதிபதியான சரஸ்வதி தேவி சக்தியையும் உள்ளங்கை அடிப்பாகத்தில் துன்பங்களே யெல்லாம் அகற்றி இன்பத்தை, மோக்ஷத்தை அளிக்கக்கூடிய பார்வதி தேவியின் சக்தியையும் நினேத்துப் பார்ப்பதென்பது பழங்காலத்தி லிருந்து வரக்கூடிய ஒருமுறை.

தொகுப்பு ; கு. லெ. கு. வெங்கிடாசலம் செட்டியார்
ஓ. சிறுவயல்

உ
சிவமயம்
ஸ்ரீ தேனாட்சி அம்பாள் துணை

அருள் செய் தேனாட்சி

எங்கள் குலம் காக்கும் தேனாட்சி அம்மையே!
எங்களுடனிருந்து வாழவைக்கும் தேனாட்சி அம்மையே!
ஆபத்தில் ஆத்தா தேனாட்சியென்றால் ஓடிவந்து காப்பவளே
அபயக்குரல் கொடுத்தால் ஓடிவந்து பயம் நீக்குபவளே
தேனாட்சியே!
கண்கலங்கும் நேரத்தில் கலங்காதே நானிருக்கேன் என்பவளே
கண்ணக் கண்ணான எங்கள் குலக்கொழுந்துகள் முன்
நிற்பவளே தேனாட்சியே!
சர்க்கரைப் பொங்கலையும் பாலையும் ஏற்று
சக்தியையும் பணவளத்தையும் தருபவளே தேனாட்சியே!
தீப ஒளிக்கு நாங்கள் அளிக்கும் சேலையை ஏற்று
தீப விளக்கை எங்கள் வாழ்வில் ஏற்றுபவளே தேனாட்சியே!
உன்னை நினையாமல் ஒரு காரியமும் செய்வதில்லை தாயே!
உன்னையன்றி (யாரும்) துணையில்லை தாயே தேனாட்சி!
உன்னைப் பணிகின்றோம் மேன்மேலும் வளமாக வாழ
வாழ்த்தியருள் செய்தாயே! தேனாட்சி அம்மையே!

சொ. முத்துக்கருப்பன் ஒ. சிறுவயல்

கருப்பர் துதி

மலையாள ராயன் கார்மேக வண்ணன்
மலையாள வீரன் தேனாட்சி காவலதிகாரி திருமேனிக் கருப்பன்
துஷ்டப் பிசாசுகள் வந்தணுகாமல்
துன்பங்கள் தொடராமல்
வல்வினைகள் வராமல்
ஏவல் பில்லி சூன்யம் எங்களை அணுகாமல்
எங்களையும் காத்திடும் திருமேனிக் கருப்பரே!
மேளதாளங்கள் முழங்க சாம்பிராணி ஜவ்வாது மணங்கமழ
ஆடுவெட்டிப் படையல் போடும் பக்தர்கள் உனக்கு
கும்பாபிஷேகம் காணும் இந்நாளில் அவர் தம் குடிகாத்து
குலம் தழைக்க திருவருள் புரிவாய் தேனாட்சி
காவலதிகாரி கார்மேக வண்ணன் திருமேனிக் கருப்பண்ணனே!

சொ. முத்துக்கருப்பன் ஒ. சிறுவயல்

மனப் பக்குவமே பக்தி

தமிழண்ணல்.

மனப் பக்குவமே பக்தி என்பது, பலர் இதன் உண்மை அறியாமல் குழம்புகின்றனர்; பிறரையும் குழப்புகின்றனர். மனம் ஒருநிலைப்படுதல் என்பது ஒருவிதமான பயிற்சி, நாம் உடற்பயிற்சி செய்கிறோமல்லவா? அதுபோல மனப் பயிற்சி செய்ய வேண்டும். அதற்கென்ன வழி? பக்திமார்க்கம். வழிபாடு, இசை பாடி மனமுருகி ஈடுபடுதல், ஒருநிலைப்படுத்தி ஒன்றை நினைத்து ஈடுபட்டு வேண்டிநிற்பது யாவும் ஒருவித மனப் பயிற்சியே. பிறவாறும் மனப் பயிற்சி விளைகிறதெனினும், இதன் மூலம் நாம் பெறும் பயிற்சி தூயது சிறந்தது, இதன் வழி நம் மனம் பக்குவப்படுகிறது. 'பக்குவப்படுதல்' என்றால் என்ன?

பெண் 'சமைந்துவிட்டாள்' என்பர் நகரத்தார். சமைதல்-அமைதல்-உறுப்புகள் யாவும் வேண்டியவாறு வளர்ந்தமைந்து பக்குவப்படுதல்; மகப் பேற்றுக்கு உரிய நலன்கள் யாவும் அமையப்பெறுதல்; ஒரு பெண் இங்ஙனம் பக்குவப்பட்டதையே 'சமைதல்' எனக் கூறினர். 'சமையல்' என்பது என்ன? உணவு பக்குவப்படுதல். அதாவது நாம் உட்கொள்ளுவதற்கு ஏற்ப உணவு வகைகளை காய்கறிகளைப் பக்குவப்படுத்துதல்-அரிசியை உண்ணும் சோறாக்குதல் இவையே சமையல் எனப்பட்டது. மதமும் தமிழில் 'சமயம்' எனப்பட்டது. மனத்தைப் பயிற்சிகளால் பக்குவப்படுத்த வழிகாட்டுவதால்தான் அது சமயம் எனப்பட்டது. இதிலிருந்து மனத்தைப் பக்குவப்படுத்தும் நெறியே சமயநெறி என்பது நன்கு புலனாகும் அது எவ்வெவ்வாறு மனத்தைப் பண்படுத்துகிறதென்பது எண்ணிப் பார்க்கதக்கதாகும். ஆயிரமாயிரம் நெறிமுறைகளைச் சமயங்கள் தேடி நல்கியுள்ளன. அவற்றை முறையறிந்து பயன்படுத்தினால் உலகில் பூசலிராது, புகைச்சலுமிராது. ஆனால். அவை மனத்தைப் பண்படுத்தும் நெறிமுறைகளென்று உண்மையுணர்ந்து பயன்படுத்தாமல் நாம் தவறுகள் செய்வதால்தான் மதங்களும் புறக்கணிக்க வேண்டியவையாய் ஆகிப்போயின. சமயம் தந்த நெறிமுறைகளை மனப்பயிற்சிக் களங்களை அப்போக்கிலும் நோக்கிலும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவற்றுள் ஒன்றை மட்டும் இவண் காண்போம்.

இறைவனிடம் வேண்டுவது என்ன?

சாதாரண மக்கள் இறைவனிடம் ஏதோ வேண்டுகிறார்கள். பிள்ளை வரம் கேட்பவர்கள், திருமணம் கைகூட வேண்டுபவர்கள், செல்வவளம் சிந்திப்பவர்கள் எனப்பலர். பரிபாடலில் இங்ஙனம் வேண்டுபவர்கள் பலரைக் காண்கிறோம், பாணர் முதலியவர்கள் இறைவனிடம் இசையுடன் பாடிவேண்டும் வாய்மொழிப்பாடல்களாதலின், பரிபாடலில் அன்று வாழ்ந்த எளிய மக்களின் குரலைக் கேட்கமுடிகிறது. சிலபோது அவர்கள் சிறிய இன்பப் பொருள்களை மட்டுமே கேட்காமல், அன்பு அருள் அறம் போன்றவற்றையும் கேட்டு வழிபட்டனர்.

கடுவன் இளவெயினனார் பாடலில் இவ் வித்தியாசமான வேண்டுதலைக் காண்கிறோம்.

யாஅம் இரப்பவை

பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே! (பரி, 5)

செவ்வேளிடம் அவர் பொன் பொருள் போகத்தை வேண்டாமல் அவற்றுக்குப் பதிலாக அருள் அன்பு அறம் ஆகியவற்றை வேண்டுகிறார். மாணிக்கவாசகர் குழைத்தபத்தில் இன்னும் ஒருபடி மேலே சென்று வேண்டும் விதம், அவர்தம் மனப்பக்குவத்தைக் காட்டுகிறது.

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அடியன்மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லாள்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே 33,6

இறைவனிடம் முழுவதுமாகத் தம்மை ஒப்படைத்துவிட்ட ஒருவரது வாசகம் இது. தாம் வேண்டும் என்று ஒன்றை நினைக்கத் தொடங்குவதே, இறைவனின் தூண்டுதலால்தான் என்பதும் அவ்வாறு வேண்டுவது யாதென்பதை முடிவு செய்வதும் அவனே என்பதும் அவன் இன்னது இவ் அடியவனுக்கு வேண்டுமென நினைத்துத் தூண்ட அதன்வழி வேண்டியதை முழுவதுமாகத் தருபவனும் எல்லாம் இறைவனே என்பதை - இப் பாடலைப் பலமுறை படித்துப் படித்து உணரலாம். அயனும் மாலும் வேண்டியும் அவர்கட்கு அரியவன் என்பதும் முரண் சுவைபட, இடையே கூறப்படுகிறது. ஆணவம் கொண்டு தாம் இதை அடைய முடியுமென எண்ணி, வேண்டாதவற்றை வேண்டுபவர் அடையும் முடிவை அது சுட்டிக்காட்டுகிறது. அதனால்தான் வேண்டத்தக்கதை அறிந்து, நெறி முறை வழுவாது, அணுகுவர் எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் என இதன்வழி உணர்த்தப்படுகிறது,

காதலில் மனம் ஒன்றிய நிலையினர் இதுபோலச் செயல்படுவதை எண்ணிப்பாருங்கள். உள்ளன்பால் தன் காதலியுடன் மனம் ஒன்றிப் போனவன், தன்னை அறியாமல் அவளுக்கு இன்னது வேண்டுமென உணர்வான்; தான் இன்னவாறு நடக்க வேண்டுமென அவள் விரும்புகிறாள் என்பதையும் அவன் உணர்வான். குறிப்பிற் குறிப்புணர்தல்' அங்குபோல் வேறெங்கும் செயற்படுவதில்லை. அதன்வழி, அவளுடைய உள்ளுணர்வையும் தன் உள்ளுணர்வால் உணர்ந்து, அவள் வேண்டுவதையே தானும் வேண்டி இயங்குபவன்போலவே, ஆன்மிக நோக்கில் மாணிக்கவாசகர் இயங்குதல் உற்று உணரத்தக்கதாகும்.

அன்பு உலகில் பெரிதும் 'விலைபேசும்' அன்பாகவே உளது. பயனை எதிர்பார்த்துச் செய்யும் பரிவே உலகில் மிகமிகக் கூடுதல் பயனை எதிர்பாராது, தன்னையே ஒப்படைக்கும் ஆழமான பேரன்பு காதலில் காணப்படுகிறது. பக்தியில் மிளிர்கிறது. இவை மனப்பக்குவத்தின் பல்வேறு நிலைகள். இங்ஙனம் பக்திவழிபாடு மனத்தை நேர்முகமாவும் மறைமுகமாகவும் பக்குவப்படுத்துவதால் அதனை விட்டுவிலக இயலாதென்பது நன்கு விளங்குகின்றது.

ஸ்ரீ தேனுட்சி துதி

ஒருகோடி சந்திரனின் ஒளியானவள்
உலகாளும் தேனாட்சி வடிவானவள்
கருவாக்கி உருவாக்கிநமை காப்பவள்
காலமெல்லாம் எங்களுக்குத் துணையானவள் (ஒரு கோடி)

நாதத்திலே கலந்த இசையானவள்
நாமென்ற மமதைக்கு எதிரானவள்
வேதத்திலே விளங்கும் பொருளானவள்
வேதனையைத்தீர்க்கும் மருந்தானவள் (ஒரு கோடி)

குறையாது அருள் வழங்கும் குருவானவள்
குலம்காத்து நலம்காக்கும் திருவானவள்
ஓம் என்ற மந்திரத்தின் பொருளானவள்
ஊனாகி உடலாகி உயிரானவள் (ஒரு கோடி)

பூவாகி காயாகி கனியானவள்
பொங்கி வரும் கடலின் வடிவானவள்
சேயாக்கி நமை எடுத்து சீராட்டுவாள்
சிந்தையெல்லாம் குளிர தாலாட்டுவாள் (ஒரு கோடி)

கு. வெ, கு. வெங்கிடாசலம் செட்டியார்
உ, சிறுவயல்

இராஜேஸ்வரி மகிமை

பட்டாடை மினுமினுமிக்க பாவாடை சிலுசிலுக்க
பச்சை இளம்குழந்தை வந்தாள் இராஜேஸ்வரி
தண்டைக்கால் கலகலங்க தங்கவளை குலுகுலுங்க
தரணியிலே கோவில் கொண்டாள் இராஜேஸ்வரி

இராஜேஸ்வரி அம்மா இராஜேஸ்வரி
இராஜேஸ்வரி அம்மா இராஜேஸ்வரி (பட்டாடை)

செட்டி மக்கள் நாட்டினிலே கலை மிகுந்த கோவிலிலே
கலியுகத்தை காக்க வந்தாள் இராஜேஸ்வரி
நகரத்தார் நாட்டினிலே வாழும் மக்கள் வீட்டினிலே
ஓடி விளையாடும் பிள்ளை இராஜேஸ்வரி (பட்டாடை)
மஞ்சள் பூசி திலகமிட்டு மலராலே மாலையிட்டு
மங்களமாய் வீற்றிருப்பாள் இராஜேஸ்வரி
கெஞ்சிவரம் கேட்டு விட்டால் கொஞ்சம் கூட
தயங்கிடாமல் நெஞ்சம் குளிரதந்திடுவாள் இராஜேஸ்வரி
(பட்டாடை)

கு. வெ. கு. வெங்கிடாசலம் செட்டியார்
உ, சிறுவயல்

பகவத்கீதையில் யோகம்

பகவத்கீதையில் பக்தியோகம், ராஜயோகம், கர்ம யோகம், ஞான யோகம் ஆகிய நான்கு யோகங்களுக்கும் சம அந்தஸ்து கொடுத்து பகரப் பட்டுள்ளது.

கர்ம யோகமும், ராஜ யோகமும் பகவத் கீதையின் முதல் ஆறு அத்தியாயங்களில் விளக்கப்பெறுகிறது. அதற்கடுத்த ஆறு அத்தியாயங்களில் பக்தி யோகம் விளக்கப் பெறுகிறது. கடைசி ஆறு அத்தியாயங்கள் ஞான யோகத்தை விளக்குகிறது.

மனிதனிடத்துள்ள ஆற்றலை கர்மயோகமும் ராஜயோகமும் வளர்க்கின்றன, மனிதனிடத்துள்ள அன்பை பக்தி யோகமும், அறிவை ஞானயோகமும் வளர்க்கின்றன.

ஆகவே, இந்த நான்கு யோகங்களையும், ஏக காலத்தில் அநுஷ்டிப்பவனே தன்னிடத்து ஆற்றலையும் அன்பையும், அறிவையும் வளர்த்து நிறைமனிதன் ஆக முடியும்,

சப்தநதிகளையும் எழுந்தருளச்செய்தல்

''ஓம் கங்கேச யமுனே சைவ கோதாவரி
சரஸ்வதி நர்மதே சிந்து காவேரி
ஜலேஸ்யின் சன்னிதம்குரு''

ஆஞ்சநேயத் துதி

அஞ்சனைச்செல்வ போற்றி அநுமஎம்ஜெய போற்றி
நெஞ்சினில் இராமநாமம் நிறைந்திடும் நிமில போற்றி
சஞ்சலம் தவிர்ப்பாய்போற்றி சற்குருநாதா போற்றி
தஞ்சமென்றடைந்த பேரை முப்போதும்காப்பாய்
போற்றி

மாங்கல்யம்

மாங்கல்யம் என்பது ஒன்பது இழைகளையுடையது. இந்த ஒன்பது இழைகளையும் காயத்ரி மந்திரம் குறிப்பிடுகிறது.

1 வாழ்க்கையை உள்ளது உள்ளபடியே புரிந்து கொள்ளுதல்.

2 ஆற்றல்

3 மேன்மை

4 தூய்மை

5 தெய்வீக நோக்கம்

6 உத்தம குணங்கள்

7 விவேகம்

8 தன்னடக்கம்

9 தொண்டு

ஆகிய இந்த ஒன்பது நற்பண்புகளையும் ஒரு பெண் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தில் அமைக்கப் பெற்றவை ஆகும்.

ஏகாதசி மகிமை

ஒவ்வொரு மாதத்திலும் சில விரதங்களும், பண்டிகைகளும் உண்டு பண்டிகை என்பது வீட்டையும் நம்மையும் அலங்கரித்து இஷ்ட தேவதைக்கும் பூஜை செய்து அறுகவை உண்டி புசிப்பதாகும். உபவாசமிருந்து சில நியமங்களைக் கைக்கொண்டு இஷ்ட தேவதையைப் பூஜிப்பது விரதம் எனப்படும் தர்மசாஸ்திரமே ஏகாதசியைப் பற்றி உபதேசிப்பதால் சைவர், மாத்வர், வைஷ்ணவர் என்றபேதயில்லாமல் எல்லோரும் இவ்விரதத்தை கைக் கொண்டுள்ளார்கள். எட்டு வயதுக்கு மேற்பட்ட வரும், எண்பது வயதுக்குப்பட்ட வரும் இரு படிவங்களிலும் ஏகாதசியில் உபவாசம் இருத்தல் வேண்டும்.

காயத்திரிக்கு ஈடான மந்திரமில்லை
காசிக்கு அதிகமான தீர்த்தமில்லை
தாய்க்குச் சமமான தெய்வமில்லை
ஏகாதசிக்குச் சமமான விரதமில்லை

என்று அக்னி புராணம் கூறுகிறது.

சக்தி வழிபாடு

ஆறு சமயங்களுள் சாக்தம் சக்தி வழி பாட்டிற்குரியதாகும். இதுவே அம்பிகை உபாசனை என்று கூறப்படுகிறது. அம்பிகை வழிபாடு சங்க இலக்கிய காலத்தில் கொற்றவை வழி பாடாகவும், தொல்காப்பியத்தில் பாலை நிலத் தெய்வ வழி பாடாகவும் இருந்தது.

அன்பு, அருள், தயை, கற்பு, ஞானம், நன்மை, ஆற்றல், கொடை, தியாகம் முதலியவற்றை சிறப்பிக்கும் வழிபாடே சக்தி வழிபாடாகும்.

அம்பிகை கேரளத்தில் பகவதி என்றும், வங்காளத்தில் காளி என்றும், காஷ்மீரத்தில் அம்பாள் என்றும், இராஜ புதனத்தில் பவானி என்றும் கூர்ஜ்ஜரத்தில் கல்யாணி என்றும், மிதிலையில் உமை என்றும், கன்னடத்தில் சாமுண்டி என்றும், தமிழகத்தில் மீனாட்சி, காமாட்சி, மாரி என்றும் அழைக்கப் பெறுகிறாள். இவ்வாறு அழைக்கப் பெறும் சக்தியே பராசக்தி. இப் பராசக்தியானவள் மகாலெட்சுமி, மகாசரஸ்வதி, மகாதுர்க்கை ஆகிய மூன்று சக்திகளையும் ஒருங்கே கொண்டவள்.

அம்பிகை உபாசனையில் யந்திரம், தந்திரம், மந்திரம் என்னும் மூன்றும் அந்த மார்க்கத்திற்கு திறவு கோல்களாக உள்ளன. யந்திரம் என்றால் கருவி, மனிதனுக்கு மானுட சரீரமே யந்திரமாக அமைந்துள்ளது. யந்திரமாகிய சரீரத்தைக் கடவுள் வழிபாட்டுக்கு உரியதாகப் பண்ணுவது தந்திர சாஸ்திர முறையாகும்.

தெய்வ வழி பாட்டுக்குரிய மந்திரங்களை முறையாகக் கையாளுவது தந்திரமாகும் தந்திரம் என்னும் சொல் நேர்வழி எனப் பொருள்படுகிறது. அம்பிகை உபாசனை செய்கின்றவர்களுக்கு யந்திரமாகிய உடல் தேவாலயமாக பாதுகாக்கப் பெறுகிறது. மந்திரத்தை அல்லது எண்ணங்களை யெல்லாம் குறியின் கண்ணே செலுத்துவதே அம்பிகையின் அருளைப் பெறுவதற்கு உற்ற உபாயமாகும். தந்திரமாக ஒரு காரியத்தைச் செய்தல் என்பது முறை யாகவும், வெற்றிகரமாகவும் அதைச் சாதித்தல் எனப் பொருள்படுகின்றது.

அம்பிகை வழி பாட்டுக்குரிய தந்திர சாதனங்கள் அனைத்தும் தேகத்தை தெய்வத்துக்குரிய தாக்கி பிறகு மனதையும் அதனிடத்தில் ஒடுக்குதலேயாகும்.

தொகுப்பு: கு. வெ. கு. வெங்கிடாசலம் செட்டியார்
உ. சிறுவயல்

பெண்கள் செய்ய வேண்டியவையும் தவிர்க்க வேண்டியவையும்

பெற்றோரும் மற்றோரும் கொடுக்காத, கொடுக்க முடியாத இன்பத்தைத் தருபவன் பதி. அவனைத் தெய்வமாகவும், குருவாகவும் உற்ற துணைவனாக வும், நண்பனாகவும் கருத வேண்டும். பதி நிற்கும் போது தான் உட்காரக் கூடாது. உண்பதற்குமுன் உண்ணக் கூடாது. உறங்குவதற்குமுன் உறங்கக் கூடாது. பின்படுத்து முன் எழுந்திருக்க வேண்டும். அவனை பிரதக்ஷிணம் செய்து காலைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொள்ள வேண்டும். அதனால் கங்காஸ்நான பலன் உண்டாகும். கபடமாக நடக்கக் கூடாது. மங்கள வேஷமில்லாமல் பதி எதிரே போகக்கூடாது. காரணமின்றி கடிந்தாலும் கோபிக்கக்கூடாது. கணவனுக்கும் அவனைச் சேர்ந்தவருக்கும் பணி செய்வதே தவம். அவன் அழைத்ததும் மற்ற வேலையை விட்டு உடனே போக வேண்டும். அவன் இட்ட வேலை கடுமையானாலும் முணு முணுக்காமல் செய்ய வேண்டும். வாசற்படியில் வெகுநேரம் நிற்கக்கூடாது. பிறர் வீட்டிற்குள் காரணமின்றிப் போகக்கூடாது. பதி அறியாமல் யாருக்கும் எதையும் கொடுக்கக்கூடாது, அவன் உத்தரவின்றி உபவாசமோ, பூஜையோ செய்க்கூடாது.

பதி உண்ட எச்சில் இலையில் உண்பதால் பத்தாயிரம் காயத்திரி ஜபித்த புண்ணியம் உண்டாகும். பதி இல்லாமல் கோயில் குளம் போகக்கூடாது. ஏழை யாயினும், ரோகியாயினும் பதியை அவமதிக்கக் கூடாது. வீட்டு விலக்குக் காலங்களில் பதியுடன் பேசக்கூடாது. தனியாக எங்கும் செல்லக்கூடாது. வேறெந்த ஆண்களுடன் சமமாக ஒரே ஆசனத்தில் உட்காரக்கூடாது. பதிக்குப் பிடித்த பொருள்களையே சாப்பிட வேண்டும். பதியினுடைய பகைவரிடம் நட்பு கொள்ளக் கூடாது. உரக்கச் சிரிக்கக் கூடாது. எதையும் இல்லை என்று சொல்லக் கூடாது. வெளியிலிருந்து பதி வந்தவுடன் முதலில் அவனைக் கவனிக்க வேண்டும். அவனுக்குத் தெரியாமல் ஒரு வேலை செய்தால் கோட்டா னாய்ப் பிறப்பர். முறைத்துப் பார்த்தால் குருடராய் விடுவர். முன்னே உண்டால் பன்றியாய்ப் பிறப்பர். நீங்கள் என்று சொல்லாமல் நீ என்றால் ஊமை ஆவர். அவமதித்தால் விதவை ஆவர்.

பதியை சேவிப்பவள் கங்கைபோல் சுத்தமாவாள். சூரிய சந்திரர் புண்ணிய நதிகள் ஆகிய அனைவரும் தம் பாபத்தை அகற்றிக் கொள்ளப் பதி விரதையை நாடுகிறார்கள். கனவிலும் புலன் அன்னிய புருஷனை நாடக் கூடாது.

மஞ்சள் குங்குமத்தை ஒரு நிமிஷமும் மறத்தலாகாது. விரித்த தலையுடன் வெளியில் செல்லக்கூடாது. திடுக்கிடும்படி பேசுதல் கூடாது. பதி அயர்ந்து உறங்கும் போது அவனை எழுப்புவது பாவம். பதிவிரதை எப்போதும் வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

பெண்கள் செய்யக் கூடாதவை

1) நெற்றியில் குங்குமம் இல்லாமல் ஒரு நிமிஷம்கூட இருக்கக்கூடாது.

2) இரண்டு கைகளாலும் தலையைச் சொறியக்கூடாது.

3) பூசணிக்காயை உடைக்கக் கூடாது.

4) கர்ப்பிணிகள் தேங்காயை உடைக்கக்கூடாது. இது கர்ப்பத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும்.

5) ஒரு தம்பதியைக் கூடவிடாமல் கலைப்பது மகாபாவம்.

6) இரவில் வீட்டைப் பெருக்கலாகாது.

7) அதிகாலையில் எழுந்து சாணம் தெளித்துக் கோலம் போட வேண்டும். இல்லையேல் மறுபிறவியில் பரமஏழை ஆவர்.

8) கையால் அன்னத்தைப் பரிமாறக் கூடாது.

9) பதி உத்தரவு இல்லாமல் தானதர்மம் செய்தல் கூடாது.

10) எந்த வஸ்துவையும் இல்லை, இல்லை என்று கூறக்கூடாது.

11) கண்ணீர் விடக்கூடாது. அழுத வீட்டில் செல்வம் தங்காது.

12) தலையை விரித்துப் போட்டுக் கொண்டு இருக்கக்கூடாது.

13) கஷ்டம் வந்தபோது 'இழவு' என்று கூறக்கூடாது.

14) கோபம் வந்த போது கடுமையான, கொடுமையான வார்த்தைகளையும் பேசக்கூடாது.

கண்ணதாசனின் படைப்பிலிருந்து தொகுப்பு :

தே. நாகப்பன், மு. நாகப்பன், தே. மீனாட்சிசுந்தரம்

———

உ
சிவமயம்

திருவிளக்கு பூஜையும், விளக்கமும்

தீபம் ஏற்றும் போது :

தீப மங்கள ஜோதி நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவ குஞ்சரி பாகா நமோ நம அருள் தாராய்

எண்ணெய்களின் பலன் :

(i)	பசுநெய்	...	இல்லத்தில் நலம் ஏற்படும். சகல செல்வங்களின் சுகம் கிட்டும்,
(ii)	நல்லெண்ணெய்	....	சகல பீடைகளும் விலகும்.
(iii)	ஆமணக்கெண்ணெய்	...	பந்து சுகம், தாம்பத்திய சுகம் விருத்தியாகும்
(iv)	கடலை எண்ணெய்	....	நாள்தோறும் கடன் தொல்லை, துக்கம், பயம், பீடை முதலியன உண்டாகும்.

திரிகளின் பலன் :

(i)	பருத்திப் பஞ்சு	....	நல்லவை ஏற்படும்.
(ii)	தாமரைத் தண்டின் நூல்	....	முன்வினை பாபத்தை போக்கும். செல்வம் நிலைத்து நிற்கும்
(iii)	வாழைத் தண்டு நூல்	...	குழந்தை பாக்கியம் உண்டாகும். தெய்வ குற்றம் குடும்ப சாபம் நீங்கி சாந்தி உண்டாகும்,
(iv)	வெள்ளை எருக்களை	...	இதன் பட்டையை திரியாகச் செய்து தீபம் போடநிறைந்த செல்வம் உண்டாகும், பேய் பிடித்தவர்களுக்கு அதன் தொல்லை விலகும்.
(v)	புது மஞ்சள் சேலைத் துண்டு	....	தேவியின் அருள் கிட்டும், வியாதிகள் குணமாகும். காற்று சேஷ்டை நீங்கும்,
(vi)	சிவப்பு கலர்ச் சேலைத் துண்டு	....	திருமணத் தடை மலட்டுத்தன்மை பைசாச செய்வினை தோஷங்கள் நீங்கும்.
(vii)	பன்னீர் விட்டு காய வைத்த வெள்ளை வஸ்திரம்	...	உத்தம பலன் ஏற்படும்.

திசைகளின் பலன்:

(*i*) கிழக்கு ... இத்திசையில் விளக்கேற்றி வழிபட துன்பம் நீங்கும் கிரகத்தின் பீடை விலகும்.

(*ii*) மேற்கு ... கடன் தொல்லை, சனி பீடை, கிரக தோஷம், பங்காளிப்பகை நீங்கும்.

(*iii*) வடக்கு .... திருமணத்தடை, சுபகாரியத்தடை, கல்வித் தடை விலகும். திரவியம் கிட்டும், சர்வ மங்களம் உண்டாகும்.

(*vi*) தெற்கு .... விளக்கேற்றுவது பெரும்பாவம்; அபசகுணம்

குலதெய்வத்திற்கு வேப்பெண்ணெய், இலுப்பை எண்ணெய், பசு நெய் ஆகிய மூன்றும் கலந்து விளக்கேற்ற செல்வம் உண்டாகும்.

பசுநெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய ஐந்தும் கலந்தும் விளக்கேற்றி வழிபட்டால் சர்வ மங்கள யோகத்தை உண்டாக்கும்.

சாயுங்கால வேளையில் விளக்கேற்றி மகாலட்சுமியை வழிபடின் வேலை கிடைக்கும். நல்ல கணவன் வேண்டுவோர் எண்ணம் நிறைவேறும், குடும்ப சுகம் உண்டாகும். புத்திர பேறு கிட்டும்,

இறைவனுக்கு உகந்த எண்ணெய்த் தீபம்:

மகாலட்சுமிக்கு	பசுநெய்யில் விளக்கேற்ற வேண்டும்
நாராயணனுக்கு	நல்லெண்ணையில் விளக்கேற்ற வேண்டும்
கணபதிக்கு	தேங்காய் எண்ணெயில் விளக்கேற்ற வேண்டும்
ருத்திரனுக்கு	இலுப்பை எண்ணெயில் விளக்கேற்ற வேண்டும்
தேவிக்கு	ஐந்து வகை எண்ணெயில் விளக்கேற்ற வேண்டும் [5 வகை எண்ணெய்: பசுநெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காய் எண்ணெய்.]
சர்வதேவதைகளுக்கு	நல்லெண்ணெயில் விளக்கேற்ற வேண்டும்.

திருவிளக்கில் ஐந்து முக விளக்கம்:

ஒரு முகம் ஏற்றுவது .... மத்திய பலன்

இரண்டு முகம் ஏற்றுவது .... குடும்ப ஒற்றுமையைப் பெருக்கும்

மூன்று முகம் ஏற்றுவது .... புத்திர சுகம் பெருகும்

நான்கு ஏற்றுவது ... பசு, பூமி ஆகியவை தரும்

ஐந்து முகம் ஏற்றுவது .... செல்வத்தை பெருக்கும்

எவர்சில்வர் விளக்கு பூஜைக்கு உகந்ததல்ல. மற்ற உலோகங்களாலான விளக்குகளில் பூஜை செய்வது நல்லது.

விபூதி குழைத்து உச்சியில் ஒரு பொட்டும். அதன் கீழ் மூன்றும், அதன் கீழ் இரண்டும் அடியில் இரண்டும் ஆக எட்டு இடங்களில் பொட்டிட வேண்டும்.

உச்சி நெற்றி; மூன்று - முக்கண்; இரண்டு - இருகை அடியில் இரண்டு திருவடி, சந்தனம், குங்குமம் ஆகியவைகளை விபூதியின் மேல் பொட்டிட வேண்டும்.

சிறப்பு நாட்களில் தேங்காய், பழம், பொங்கல், சுண்டல், அவல், கடலை முதலியவற்றை படைப்புப் பொருளாக வைத்து வழிபாடு செய்ய வேண்டும். நாள்தோறும் நடத்தும் வழிபாட்டிற்கு நெற்பொறி அல்லது முந்திரிப்பழம், வெல்லம் பயன்படுத்த வேண்டும்.

வாழை இலைமீது குத்துவிளக்கேற்றி வழிபாடு செய்ய வேண்டும்.

செவ்வாய், வெள்ளி, அமாவாசை, பௌர்ணமி, பிரதோஷம், கார்த்திகை நட்சத்திரம் ஆகிய நாட்களில் செய்து வரும் திருவிளக்கு வழிபாடு இகபரசுகம் அளிக்கும், நாள்தோறும் திருவிளக்கு வழிபாடு செய்து வரலாம். 108 நாட்களில் இல்லத்தில் மங்கள காரியம் நடக்கும்.

குத்துவிளக்கிலுள்ள ஐந்து முகங்கள், சிவபெருமானுக்குரிய பஞ்சாக்ஷரத்தைக் குறிக்கும். குடும்பப்பெண்களுக்கு இருக்க வேண்டிய அன்பு, மனஉறுதி, நிதானம், சமயோசிதம், சகிப்புத்தன்மை ஆகியவற்றையும் குறிக்கும்.

இடக்கையால் மங்கள காரியம் செய்தல் கூடாது. ஒரு திரியினால் கிழக்கு முகமாக எரியவேண்டும். கையால் வீசியும், வாயால் ஊதியும் அணைக்கக் கூடாது. அன்புக் காணிக்கையாக ஒரு அரிசியை தீபத்தின் மேல் தட்டில் வைத்து ''எப்பொழுதும் என் உள்ளொளி பெருக வேண்டும்,'' என்று பிரார்தனை செய்து திரியை மெதுவாக உள்ளே இழுத்து ஒளியை நெய்யில் அல்லது எண்ணெயில் மறையச் செய்ய வேண்டும்.

வாழை இலை வழிபடுவோர் குடும்பம் வாழையடி வாழையாகத் தழைத்தோங்குவதைக் குறிக்கும். அவர்கள் வாழ்வு பசுமையையும் பிறருக்கு பயன்படுவதையும் குறிக்கும்,

தொகுப்பு :

கரு. தே. தே. சுப்பையா செட்டியார்

கீழச்சிவல்பட்டி.

விபூதி வாங்கும் முறை

கோயிலில் விபூதிப் பிரசாதம் வாங்கும்போது ஒற்றைக் கையை மாத்திரம் நீட்டி வாங்கக்கூடாது.

வலக்கையின் கீழே இடக்கையில் கொட்டி அதிலிருந்து மறுபடி எடுத்துத் தரித்தல் கூடாது, வலக்கையில் பெற்றுக் கொண்டவிபூதியை அப்படியே நெற்றியில் தரிப்பது நலம். அவ்விதம் செய்ய இயலாவிட்டால், ஒரு சிறு தாளில் விபூதியை இட்டு, அதிலிருந்து எடுத்துத் தரிக்கலாம்.

வயதில் நம்மைவிட இளையவர் கைகளிலிருந்து விபூதி எடுத்துத் தரிக்ககூடாது. விபூதியை நம் கையில் இடச் செய்து, அதிலிருந்துதான் எடுத்துத் தரித்துக்கொள்ள வேண்டும்.

குங்குமத்தை இளையவர் கைகளிலிருந்து எடுத்துத் தரிப்பதில் தவறில்லை.

... வடபழனி கோயில் அர்ச்சகர் ஒருவர் கூறியது

திருப்பணிக்குழு பொருளுதவி நல்கியோர்

மின்னஞ்செட்டி காளியாத்தாள் மண்டபம் கட்டியது:

திரு கரு. தே. தே. நாகப்ப செட்டியார், மேலைச்சிவபுரி
திரு தே. ராம. முருகப்ப செட்டியார், கீழச்சிவல்பட்டி

பிரகாரத்தில் ஆனைஅடி கல் பதித்தது:

திரு கரு. தே. தே. இராமசாமி, மேலைச்சிவபுரி
திரு கரு. தே. தே. லெக்ஷ்மணன், மேலைச்சிவபுரி

மின் விளக்கு உபயம்:

திரு அரு. நா. பெ. நா. கோட்டையூர்

கோபுர கலசங்கள் உபயம்:

திரு சி. குழந்தைவேலு, B. A, B. L.
சட்டமன்ற உறுப்பினர், குளத்தூர்

கோவில் பின்புற வாரம் புதுப்பித்து கட்டியது:

திருமதி கரு. தே. தே. மீனாட்சி ஆச்சி, மேலைச்சிவபுரி

முகப்பு கதவு உபயம்:

திரு கரு. தே. தே. நாகப்ப செட்டியார், மேலைச்சிவபுரி

அபிஷேக ஆராதனைப் பொருட்கள் உபயம்:

திரு கரு. தே. தேனப்ப செட்டியார் குடும்பத்தினர், மேலைச்சிவபுரி

புஷ்ப உபயம்:

திரு கு. வெ. கு. வெங்கிடாசலம் செட்டியார், உ. சிறுவயல்

சேமங்குதிரை மராமத்து பார்த்து வர்ணம் வைத்தது!

திரு கு. வெ. கு. வெங்கிடாசலம் செட்டியார், உ. சிறுவயல்

சுவாமிகள் திருவீதி உலா:

திரு முரு. பழனியப்பன், தேனிபட்டி

திருப்பணியில் பணியாற்றியவர்கள்:

ஸ்தபதி திரு என். சிதம்பரநாதன் அவர்கள், கல்லல்

எந்திரம் அமைத்தது:

திரு அய்யாவு குருக்கள், நந்தி ஆஸ்ரமம், பள்ளத்தூர்
(பாலசுப்பிரமணிய சிவாச்சாரியார்)

மருந்து சாத்தியது;

திரு கரு. வேலுச்சாமி, நேமம்

யாகசாலை பூஜை கும்பாபிஷேகம்:

திரு மு. சுப்பிரமணிய பட்டர், பில்லமங்கலம்-கீழச்சிவல்பட்டி

கும்பாபிஷேக மலர் சிறப்புற அமைய பங்கேற்றவர்கள் :

திரு மு. நா. மு. நாகப்பன், மேலைச்சிவபுரி
திரு கரு. தே. தே. நாகப்பன், மேலைச்சிவபுரி
திரு உ. மாணிக்கம் செட்டியார், தேனிபட்டி
திரு கரு. தே. தே. சுப்பையா செட்டியார், கீழச்சிவல்பட்டி
திரு செ. இராமையா செட்டியார், தேனிபட்டி
திரு கு, வெ, கு, வெங்கிடாசலம் செட்டியார், உ. சிறுவயல்
திரு இராம. முத்தையா செட்டியார், மேலைச்சிவபுரி
திரு சொ. முத்துக்கருப்பன், உ. சிறுவயல்
திரு மு. கரு. சேதுராமன் செட்டியார், மேலைச்சிவபுரி
திரு மு கரு. சுப்பையா செட்டியார், மேலைச்சிவபுரி
திரு செ. உ, க, அண்ணுமலை செட்டியார், தேனிபட்டி
திரு செ, உ, க, அ, செல்லப்பன், தேனிபட்டி
திரு VR. முருகப்ப செட்டியார், தேனிபட்டி
திரு மு. கரு, மு, கருப்பையா செட்டியார், மேலைச்சிவபுரி
திரு இராம, தேனப்ப செட்டியார், தேனிபட்டி
திரு முரு, இராமசாமி செட்டியார், தேனிபட்டி
திரு கரு, தே, தே, லெக்ஷ்மணன், மேலைச்சிவபுரி
திரு கரு, தே, தே, இராமசாமி, மேலைச்சிவபுரி
திரு A காசிவிஸ்வனுதன், தேனிபட்டி
திரு A. விஜயகுமார். தேனிபட்டி
திரு T. இராசேந்திரன், கோவை

மலர் தொகுப்பு :

அக்ரி நா, அண்ணுமலை, வலையபட்டி